விலை: 30.00
பக்கங்கள் : பதினாறு
website : www.valampurii.lk
viber : 076 636 3378

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1500/= + 500/= மட்டுமே

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 ஐப்பசி 03 புதன்கிழமை (20.10.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 305

கொரோனா மேலும் பரவாமல் தடுக்க

# இந்த ஒரு மாத காலம் மிகவும் முக்கியமானது



## இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவிப்பு

(கொழும்பு)

கொரோனா மேலும் பரவாமல் தடுக்க இந்த ஒரு மாத காலம் மிகவும் முக்கியமானது எனவும் பொதுமக்கள் இதற்கு ஆதரவளித்தால் அடுத்த மாதத்தில் கொரோனாவைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரலாம் எனவும் இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

(15ஆம் பக்கம் பார்க்க)

## பசுவதை சட்டத்தை

அமுல்படுத்த அனுமதி 7

## எரிபொருள் விலை உயர்வை தவிர்க்க முடியாது

7

## நாட்டில் மேலும் 18 பேர் பலி

(கொழும்பு)

கோவிட் தொற்றுக்கு உள்ளாகி நாட்டில் மேலும் 18 பேர் உயிரிழந்துள்ளனர்.

அதனடிப்படையில் நாட்டில் கோவிட் தொற் 15

அதிபர் - ஆசிரியர் போராட்டம் நிறுத்தப்படாது

## பட்டதாரி பயிலுநர்களுக்கு ஆசிரியர் நியமனமானது தொழிலாளர் திருட்டு

### இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களின் தொழிற்சங்க நடவடிக்கை நிறுத்தப்படாது என்று இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவித்துள் 15

சமகால விடயங்கள் தொடர்பில்

## கூட்டமைப்பின் தலைவருடன் வடக்கு ஆளுநர் கலந்துரையாடல்



(கொழும்பு)

வடக்கு மாகாண புதிய ஆளுநர் ஜீவன் தியாகராஜா, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனை நேற்று கொழும்பி 15

## அதிக தொற்றாளர்கள் சமூகத்தில் நடமாட்டம்

### பொது சுகாதார பரிசோதகர்கள்

(கொழும்பு)

தரவுகளுக்கு அமைய நாட்டில் கோவிட் வைரஸ் பரவல் கட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக கூறப்படுகின்றபோதிலும், நாட்டில் கீழ் மட்டத்தில் மிக வேகமாக கோவிட் வைரஸ் பரவிக்கொண்டுள்ளது.

15

## நைட்ரஜன் உரம் இறக்குமதி செய்ய நடவடிக்கை

### அமைச்சர் ரமேஷ்

(கொழும்பு)

உரப் பற்றாக்குறை பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காக இரசாயன உரத் தினை இறக்குமதி செய்வதற்கு தீர்மானிக்கப்பட்ட 15

## காரைநகரில் தமிழக மீனவரின் படகு விபத்து

### நீரில் மூழ்கி காணாமல்போன மீனவர் சடலமாக மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், காரைநகர், கோவளம் கடற்பரப்பில் சட்டவிரோதமாக மீன்பிடியில் ஈடுபட்ட இந்திய மீனவர்களின் படகு விபத்துக்குள் 15

## வடக்கின் 5 மாவட்ட செயலகங்களிலும் இரு ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர்கள்

ஆளுநர் ஜீவன் தியாகராஜா நடவடிக்கை 15ஆம் பக்கம் பார்க்க

பாடசாலை செல்லவில்லையானால்

## அதிபர், ஆசிரியர்களின் மாத சம்பளம் நிறுத்தப்படும்

(கொழும்பு)

21 ஆம் திகதி பாடசாலைகள் ஆரம்பமான பிறகு வேலைநிறுத்தத்தில் ஈடுபடும் ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களின் நவம்பர் மாத சம்பளம் நிறுத்தப்படும் என்று வடமேல் மாகாண ஆளுநர் ராஜா கொல்லுரே தெரிவித்துள்ளார்.

அதேபோல், 25 15

பெற்றோரை வெட்டப்போவதாக அச்சுறுத்தி

## 17 வயது மாணவனிடம் பணம், நகை அபகரிப்பு

### போலி முகநூலில் அச்சுறுத்திய மாணவனின் நண்பன் கைது

(அராலி) பெற்றோரை வெட்டப்போவதாக அச்சுறுத்தி மாணவனிடம் பணம், நகை என்பவற்றினை அபகரித்த மாணவனது நண்பன் வட்டுக்கோட்டை பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

(15ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# இழுவைப்படகுக்கு எதிராகவே போராட்டம் இந்தியாவுக்கு எதிரானது அல்ல

## சுமந்திரன் எம்.பி விளக்கம்



(யாழ்ப்பாணம்)

இழுவைப்படகு மீன்பிடியை நிறுத்தக் கோரியே போராட்டத்தை முன்னெடுத்தோம். இந்த போராட்டம் இந்தியாவிற்கு எதிரானது அல்ல என தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், வன்முறை அற்ற வகையில் தீர்வை காணவே நாம் முயற்சிக்கின்றோம். மீன்பிடி அமைச்சர் வன்முறையை பயன்படுத்தி அவர்களை இழுத்து வருமாறு கோரியிருந்தார்.

ஆனால் நாம் போராடியபோதும் சட்டத்தை அமுல்படுத்துமாறே கோரினோம். சட்டத்தை தெளிவாக நடைமுறைப்படுத்தினால் இவ்வாறான பிரச்சினைகள் வராது?

இழுவை மடித் தொழில் பாதிப்பானது என இரு நாட்டு அரசும் இணங்கிய விடயம். உள்ளூர் இழுவை மடியை செய்யும் குருநகர் மீனவர்கள் ஆறு ஆண்டுகளிற்கு முன்பு என்னோடு பேசிய போது 6 மாத கால அவகாசமே கோரினர். இந்திய மீனவ அமைப்புக்களுக்கும் இது பாதிப்பு எனத் தெரியும். ஆனாலும் அனுமதியுங்கள் என்கின்றனர்.

எனவே இதனை முழுமையாக தடை செய்யுமாறே கோருகின்றோம். இதேநேரம் எமது போராட்டத்தை இந்தியாவிற்கு எதிரான போராட்டமாக காட்டி போராட்டத்தை வலுவிழக்கச் செய்ய முயற்சிக்கின்றனர். உண்மையில் இதனை தடுக்க வேண்டும் என்பதில் இந்தியாவும் இணங்கியமையினால் இது இந்தியாவிற்கான எதிரான போராட்டம் அல்ல என்றார். (ம-03,33,101)

# யாழில் 13 பேர் உட்பட வடக்கில் 19 பேருக்கு கொரோனாத் தொற்று

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் 13 பேர் உட்பட வடக்கு மாகாணத்தில் 19 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனையில் குறித்த தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அவற்றின் அடிப்படையில், சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 05 பேர், யாழ். போதனா வைத்தியசாலையில் 02 பேர்,சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் ஒருவர், பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் ஒருவர், காங்கேசன்துறை கடற்படை முகாமில் 03 பேர், தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் ஒருவர்,

மன்னார் மாவட்ட வைத்தியசாலையில் ஒருவர்,

முல்லைத்தீவு மல்லாவி ஆதார வைத்தியசாலையில் 03 பேர், முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் ஒருவர்,

வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் ஒருவர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். (ம-03)

# தமிழக மீனவர்களுக்கு எதிராக அரசு நாடகம்

## பழ. நெடுமாறன் கண்டனம்

(சென்னை)

தமிழக மீனவர்களுக்கு எதிராக ராஜபக்ஷ அரசு நாடகம் நடத்துகின்றது என தமிழர் தேசிய முன்னணி கட்சியின் தலைவர் பழ.நெடுமாறன் கண்டனம் தெரிவித்துள்ளார்.

நேற்று வெளியான ஊடக அறிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் தெரிவிக்கையில்,

இந்தியா - இலங்கைக்கு இடையே உள்ள மன்னார் வளைகுடா கடல் பகுதி முழுவதும் தனக்கு மட்டுமே சொந்தமானது போல சிங்கள அரசு கருதிக் கொண்டு தமிழக மீனவர்களைத் தொடர்ந்து வேட்டையாடி வருகிறது.

1980களின் தொடக்கத்திலிருந்து இன்று வரை தமிழ் நாட்டு மீனவர்களை சுட்டுக் கொல்வதும், படுகாயப்படுத்துவதும், சிறைப்பிடிப்பதும் அவர்களின் படகுகள், வலைகள் ஆகியவற்றைச் சேதப்படுத்துவதும் இன்றுவரை தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

தமிழக அரசும், தமிழ்நாட்டு அரசியல் கட்சிகளும் சிங்கள அரசின் இந்த அட்டூழியத்தைக் கண்டித்துக் குரல் எழுப்பியவுடன், அதை திசைத் திருப்பும் வகையில் தமிழக மீனவர்களுக்கு எதிராக இலங்கை மீனவர்கள் ஆர்ப்பாட்டம் செய்வதாக ஒரு நாடகத்தை ராஜபக்ஷ அரசு அரங்கேற்றியிருக்கிறது. இதை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன்.

இந்தியாவின் எல்லைப் பகுதிகளில் ஊடுருவி அத்துமீறி செயல்படும் அந்நிய நாட்டுப் படைகளுக்கு இந்தியப் படைகள் உடனுக்குடன் பதிலடி கொடுப்பதைப் போல, மன்னார் வளைகுடாப் பகுதியில் அத்துமீறும் சிங்கள கடற்படைக்குப் பதிலடி கொடுக்க இந்தியக் கடற்படை முன்வர வேண்டும்.

தொடர்ந்து பாதிக்கப்படும் தமிழக மீனவர்களுக்கு உரிய இழப்பீட்டை சிங்கள அரசிடம் பெற்றுத்தர வேண்டும் என வலியுறுத்துகிறேன். (ம-03)

# அரசாங்கம் மக்கள்மீது சுமைகளை சுமத்தவில்லை

## அமைச்சர் டலஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் பாரிய டொலர் நெருக்கடி காணப்படுகின்ற போதிலும் மக்களுக்காக எடுக்கப்பட வேண்டிய அனைத்து நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படுகின்றன.

ஆனால் எந்தவொரு நிலைமையின் கீழும் பிரஜைகள் மீது அனைத்து சுமைகளையும் சுமத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவில்லை என்று அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

வாராந்த அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அமைச்சர் இதனை தெரிவித்தார்.

நுகர்வோர் மீது சுமையை சுமத்துவதற்கு அரசாங்கம் என்ற ரீதியில் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதில்லை. உலகளாவிய ரீதியில் அபிவிருத்தியடைந்த நாடுகள் கூட கோவிட் தொற்றினால் நெருக்கடிகளுக்கு மத்தியில் கடும் நிபந்தனைகளுடனேயே ஆட்சியை முன்னெடுத்து செல்வதாகவும் அவர் இதன்போது சுட்டிக்காட்டினார். (ம-03)


## காணி விற்பனைக்கு

நாவற்குழி - பூநகரி வீதியில் நாவற்குழிச் சந்தியில் இருந்து 500M தூரத்தில் ரெயில் பாதையைக் கடந்ததும் பிரதான வீதியில் இருந்து வலதுபுறமாக உள்ள பாதையில் இரண்டாவதாக உள்ள 2 பரப்புக் காணி 20 அடி பாதையுடன் விற்பனைக்கு உள்ளது.

(8308)

தொடர்புகளுக்கு:- 077 773 8001


# ரயில் போக்குவரத்து தொடர்பில் வெள்ளி இறுதித் தீர்மானம்

(கொழும்பு)

ரயில் போக்குவரத்து தொடர்பில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை இறுதித் தீர்மானம் எட்டப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ரயில்திணைக்கள பொதுமுகாமையாளர் தம்மிக ஜயசுந்தர இதனை தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் இடம்பெறவுள்ள கோவிட்-19 தடுப்பு செயலணியின் கூட்டத்தின்போதே இது தொடர்பில் இறுதித் தீர்மானம் எட்டப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதுவரை சரக்கு தொடருந்துகள் மாத்திரம் போக்குவரத்தில் ஈடுபடும் என ரயில்வே திணைக்கள பொதுமுகாமையாளர் தெரிவித்துள்ளார். (ம-03)


## கண்ணீர் அஞ்சலி

எமது வாழ்வக நிறுவனத்தின் பழைய மாணவரும்
தற்போதைய பொதுச்சபை அங்கத்தவரும்
பிரபல சட்டத்தரணியுமான
திரு. **சொர்ணலிங்கம் தர்மதன்** அவர்களின் தந்தை

### திரு. முருகேசு சொர்ணலிங்கம்



அவர்களின் திடீர் மறைவுச் செய்தி கேட்டு
அதிர்ச்சியும் ஆழ்ந்த துயரமுமடைகின்றோம்.
துயர் சூழ்ந்த இவ்வேளையில் அன்னாரின்
குடும்பம் மற்றும் உறவுகளோடு நாமும்
இணைந்துகொள்வதோடு அவரின் ஆத்ம
சாந்திக்காகவும் இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(C-2844)

வாழ்வக சமூகம்


# திருமண நிகழ்வில் கலந்துகொண்ட 19 பேருக்கு கொரோனாத் தொற்று

## குருநாகல் குளியாப்பிட்டியில் சம்பவம்

(குருநாகல் )

குருநாகல் மாவட்டம், குளியாப்பிட்டி பிரதேசத்தில் இடம்பெற்ற திருமண நிகழ்வொன்றில் பங்கேற்ற 35 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் 19 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்தத் தகவலை குளியாப்பிட்டி பொது சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயம் நேற்று தெரிவித்துள்ளது.

குளியாப்பிட்டி, கரகஹகெதர பிரதேசத்திலுள்ள மண்டபமொன்றில் இந்தத் திருமண நிகழ்வு இடம்பெற்றுள்ளது.

இந்த நிகழ்வில் பங்கேற்ற அனைவரும் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டனர். இதன்போதே 19 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸ் தொற்று முற்றாக நீங்கிவிட்டது என்று நினைத்து மக்கள் செயற்படுவதால் மீண்டும் கொரோனா வைரஸ் தொற்றுப் பரவல் அதிகரிக்கும் ஆபத்து ஏற்பட்டுள்ளது எனக் குளியாப்பிட்டி பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி உத்பல சங்கப்ப தெரிவித்துள்ளார். (ம-03)

## 2020 சா/த பரீட்சை பெறுபேற்றில்

# மன்னார் மடு கல்வி வலயம்

# வடக்கு மாகாணத்தில் முதலிடம்

**(மன்னார்)**

**கடந்த வருடம் 2020 ஆம் ஆண்டு இடம் பெற்ற க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் வட மாகாணத்தில் உள்ள 12 கல்வி வலயங்களில் மன்னார் மாவட்டம் மடு கல்வி வலயம் 1 ஆவது இடத்தை பெற்றுள்ளது.**

வட மாகாண ரீதியில் 1 ஆவது இடத்தையும் தேசிய ரீதியில் 35 ஆவது இடத்தையும் மடு கல்வி வலயம் பெற்றுள்ளது.

மடு வலயக்கல்வி பணிப்பாளராக கடமையாற்றிய முன்னை நாள் வலயக் கல்வி பணிப்பாளர் க.சத்தியபாலனின் முயற்சியினாலும் மடு கல்வி வலயத்தில் உள்ள ஆசிரியர்களின் அயராத முயற்சியினாலும் அர்ப்பணிப்பான சேவையினாலும் குறித்த சாதனை நிலை நாட்டப்பட்டுள்ளதாக மாணவர்களின் பெற்றோர் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர்.மடு கல்வி வலயத்தில் உள்ள மாணவர்கள் பல்வேறு சவால்களுக்கு மத்தியில் தமது கற்றல் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர்.

மாணவர்கள் உரிய போக்குவரத்து வசதி இல்லாமையினால் பாடசாலைக்கு உரிய நேரத்திற்கு செல்ல முடியாத நிலை, மேலதிக வகுப்புக்கு மாணவர்கள் செல்வதில் காணப்படும் இடர்கள் உள்ளிட்ட பல்வேறு இடர்களுக்கு முகம் கொடுத்த மடு கல்வி வலய மாணவர்கள் பாடசாலை கல்வியையும் பாடசாலை ஆசிரியர்களையும் மாத்திரமே நம்பி இருந்துள்ளனர்.கடந்த வருடம் வடக்கு மாகாணத்தில் 5ஆவது நிலையிலும் தேசிய ரீதியில் 73 ஆவது நிலையிலும் இவ் வலயம் இருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (7-4-285)

# பிரதமரை அடித்து விரட்டுவது போல்

# சித்தரித்த ஆர்ப்பாட்டக்காரர்கள்



(கொழும்பு)

அத்தியாவசிய பொருட்களின் விலையேற்றத்தால் ஏற்பட்டுள்ள பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு தீர்வு பெற்றுத்தருமாறு வலியுறுத்தி அநுராதபுரம் மக்கள் முன்னெடுத்த போராட்டம் அனைவரின் கவனத்தையும் ஈர்த்துள்ளது.

ஆர்ப்பாட்டத்தின் போது பிரதமர் மகிந்த ராஜபக்ஷ போன்று வேடமிட்டுவந்த ஒருவரை அடித்து விரட்டுவது போல சித்தரித்து, ஆர்ப்பாட்டக்காரர்கள் அரசாங்கத்திற்கு எதிரான தமது எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.

அரசாங்கத்தின் மீதான தமது வெறுப்பை வெளிக்காட்டும் வகையில் இதனை திட்டமிட்டதாக ஆர்ப்பாட்டக்காரர்கள் தெரிவித்துள்ளனர். (நி-5)

# பாடசாலைகள் நாளை ஆரம்பம்

(கொழும்பு)

கொவிட்-19 வைரஸ் தாக்கத்தின் காரணமாக கடந்த ஜனவரி மாதம் முதல் பல்வேறு சந்தர்ப்பங்களில் மூடப்பட்ட பாடசாலைகள் முதற்கட்டமாக நாளை திறக்கப்படவுள்ளன.

200 இற்கும் குறைவான மாணவர்களைக் கொண்ட ஆரம்ப பிரிவு மாணவர்களை உள்ளடக்கிய பாடசாலைகளின் கற்றல் நடவடிக்கைகள் நாளை வியாழக்கிழமை முதல் ஆரம்பிக்கப்படவுள்ளன.

18 ஆயிரம் பட்டதாரி பயிலுனர்களை கற்பித்தல் நடவடிக்கைகளில் ஈடுப்படுத்த கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

அதிபர்- ஆசிரியர் தொழிற்சங்கத்தில் அங்கம் வகிக்கும் ஆசிரியர் மற்றும் அதிபர்கள் எதிர்வரும் திங்கட்கிழமை முதல் பாடசாலைக்கு சமுகமளிக்க தீர்மானித்துள்ளதுடன், முன்வைக்கப்பட்டுள்ள கோரிக்கைகளுக்கு தீர்வு கிடைக்கும் வரை மாற்று தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடவும் தீர்மானித்துள்ளனர். (நி-5)

# அதிக விலையில் சீனி விற்பனை

## பொது மக்கள் குற்றச்சாட்டு

(கரணவாய்)

வடமராட்சிப் பகுதியில் உள்ள சில வர்த்தக நிலையங்களில் அதிக விலைக்கு சீனி விற்பனை செய்வதாக பொது மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

குறிப்பாக ஒரு மூடை சீனி சில வர்த்தக நிலையங்களில் 7,100 ரூபாய்க்கும் சில வர்த்தக நிலையங்களில் 7,500 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகின்றது.

இதனால் உள்ளூர் சிறு வர்த்தகர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.எனவே இது தொடர்பாக உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்குமாறும் பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (4-7-60)

# இழுவை வலைத் தடைச் சட்டத்தினை கடந்த ஆட்சியில் பயன்படுத்தாதது ஏன்?

## அமைச்சர் டக்ளஸ் கேள்வி

(கிளிநொச்சி)

இழுவை வலை தடைச் சட்டத்தினை உருவாக்கியதாக தெரிவிக்கின்றவர்கள், அந்தச் சட்டத்தினை அமுல்படுத்தாமல் இருந்தது எதற்காக என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கேள்வி எழுப்பியுள்ளார்.

கிளிநொச்சியில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு தெரிவிததார்.

இந்தியக் கடற்றொழிலாளர்களினால் மேற் கொள்ளப்படு கின்ற எல்லை தாண்டிய அத்து மீறிய சட்ட விரோத தொழில் முறைக்கு எதிராக 2017 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட இழுவை வலைத் தடைச் சட்டம் பயன்படுத்தப்படாமையினாலேயே இந்தியக் கடற்றொழிலாளர் அதிகளவில் எல்லை தாண்டி வருவதாக குற்றஞ் சாட்டப்பட்டது.

இதுதொடர்பாக ஊடகவியலாளர்களின் கேள்விக்குப் பதிலளித்த கடற்றொழில் அமைச்சர்,

குறித்த சட்டத்தினை உருவாக்கியபோது, மூன்றிலிரண்டு பெரும்பாண்மையை பெற்றுக் கொள்வதற்காக ஈ.பி.டி.பி. கட்சியும் ஆதரவளித்திருந்தமையை சுட்டிக்காட்டினார்.

2017 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் இழுவை வலைச் சட்டம் உருவாக்கப்பட்ட பின்னர் சுமார் 100 இற்கும் மேற்பட்ட இந்திய மீன்பிடிப் படகுகள் கைப்பற் றப்பட்ட போதிலும், அவைக்கு எதிராக இழுவை வலைத் தடைச் சட்டம் பயன்படுத்தப்படவில்லை எனவும் குற்றஞ் சாட்டினார்.

எனினும், தற்போது குறித்த சட்டங்களின் அடிப்படையில் நடவடிக்கை மேற் கொள்வதற்கு ஏற்பாடுகள் மேற் கொள்ளப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார். (7-4)

# விரைவு தபால் ஊடாக வாகன இலக்க தகடுகள்

(கொழும்பு)

வாகன இலக்கத்தகடுகள் மற்றும் உரிய ஆவண்ங்களை விரைவுத் தபால் அல்லது விரைவு கொரியர் சேவையின் ஊடாக வாகன உரிமையாளர்களுக்கு பெற்றுக் கொடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சாதாரண தபால் முறையில் காணப்படும் பிரச்சினைகள் அடையாளங்காணப்பட்டுள்ள காரணத்தினால், இந்த தீர்மானத்தை எடுத்துள்ளதாக போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்துள்ளார். (நி-5)

# இலங்கை- இந்தியா உறவை எவராலும் பிரிக்கவே முடியாது

## பீரிஸ் திட்டவட்டம்

(கொழும்பு)


இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான உறவை எவராலும் பிரிக்கவே முடியாது என வெளி விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது,

"இந்தியாவின் குஷி நகரிலுள்ள விமான நிலையமானது, சர்வதேச விமான நிலையமாக மேம்படுத்தப்பட்டு, இன்று 20 ஆம் திகதி திறந்து வைக்கப்படுகிறது.

குறித்த விமான நிலையத்துக்கு இலங்கையில் இருந்தே முதலாவது விமானம் செல்கிறது. அந்த விமானத்தில் 100 பிக்குகள் செல்கின்றனர். அமைச்சர் நாமல் ராஜபக்ஷவும் பயணிக்கிறார்.

முதலாவதாக அங்கு தரையிறங்கும் விமானத்தை பிரதமர் நரேந்திர மோடி வரவேற்பார். இது இலங்கைக்கு கிடைக்கப் பெற்ற வரலாற்றுச் சிறப்பு மிக்க வாய்ப்பாகும் என அவர் தெரிவித்தார். (நி-5)



பெரும்போக நெற் செய்கையின் நீர்ப்பாசனத்திற்காக நேற்றைய தினம் கிளிநொச்சி இரணைமடுக் குளம் திறந்து வைக்கப் பட்டுள்ளது. இரணைமடுக் குளத்தின் கீழ் 21 ஆயிரம் ஏக்கருக்கு மேற்பட்ட நிலப்பரப்பில் கால போக நெற்செய்கையில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(படம்- கிருஷ்ணகுமார்)

# செர்ரி கால்பந்து லீக்

## ஜுவெண்டஸ் அணி வெற்றி




இத்தாலியின் செர்ரி கால்பந்து லீக் தொடரின் எட்டாவது கட்டப் போட்டியில், ஜுவெண்டஸ் அணி வெற்றி பெற்றுள்ளது.

பழமையான இத்தொடரில், தற்போது எட்டாவது கட்டப் போட்டிகள் நடைபெற்று முடிந்துள்ளன.

இதில் ஜுவெண்டஸ் விளையாட்டரங்கில் நடை பெற்ற போட்டியில், ஜுவெண்டஸ் அணியும் ரோமா அணியும் மோதின.

இப்போட்டியில், ஜுவெண்டஸ் அணி 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. இதில் ஜுவெண்டஸ் அணி சார்பில், மொய்ஸ் கீஹன் போட்டியின் 16 ஆவது நிமிடத்தில் ஒரு கோல் அடித்தார்.

இதுவரை நடைபெற்று முடிந்துள்ள போட்டிகளின் அடிப்படையில், புள்ளிப்பட்டியலில் ஜுவெண்டஸ் அணி, 14 புள்ளிகளுடன் ஏழாவது இடத்திலும் ரோமா அணி 15 புள்ளிகளுடன் நான்காவது இடத்திலும் உள்ளன. (4)

# உலகக்கிண்ண இருபது-20

## நமீபியாவை வீழ்த்தியது இலங்கை




இருபது-20 உலகக் கிண்ண தொடரின் முதல் சுற்றுப் போட்டியில், இலங்கை அணி முதலாவது வெற்றியைப் பதிவு செய்துள்ளது.

அபுதாபியில் நேற்று முன்தினம் நடைபெற்ற இப்போட்டியில், இலங்கை அணியும் நமீபியா அணியும் மோதின.

இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணி முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய நமீபியா அணி, 19.3 ஓவர்கள் நிறைவில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 96 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

இதன்போது அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக கிரைஜ் வில்லியம்ஸ் 29 ஓட்டங்களையும் ஜெராட் எரஸ்முஸ் 20 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

இலங்கை அணியின் பந்து வீச்சில், மகேஷ் தீக்ஷன 3 விக்கெட்டுகளையும் லஹிரு குமார மற்றும் வனிந்து ஹசரங்க ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும் சமிக்க கருணாரத்ன மற்றும் துஷ்மந்த சமீர ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இதனைத்தொடர்ந்து 97 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய இலங்கை அணி, 13.3 ஓவர்கள் நிறைவில் 3 விக்கெட்டுகள் இழப்புக்கு வெற்றி இலக்கை கடந்தது. இதனால் இலங்கை அணி 7 விக்கெட்டுகளால் வெற்றி பெற்றது.

இதில் அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, பானுக ராஜபக்ஷ ஆட்டமிழக்காது 42 ஓட்டங்களையும் அவிஷ்க பெனார்டோ ஆட்டமிழக்காது 30 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

நமீபியா அணியின் பந்து வீச்சில், ரூபன் ட்ரம்பெல்மன், பெர்னாட் ஸ்கோல்டஸ் மற்றும் ஸ்மிட் ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர். இப்போட்டியின் ஆட்ட நாயகனாக இலங்கை கிரிக்கெட் அணியின் மஹேஷ் தீக்ஷன தெரிவுசெய்யப்பட்டார். (4)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2430

Search for people, places and things

### ருக்ஷாயினி




### அத்வைதா




### சுஜீவா




### தர்சிகன்




### அர்ஜின்




### அனோஜன்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

## இராசிபலன்

20.10.2021
ஜப்பசி 03, புதன்கிழமை
பூரணை முன்னிரவு 8.53 மணிவரை
ரேவதி பிற்பகல் 3.16 மணிவரை
சுபநேரம் 4.32-6.02 மணிவரை
இராகுகாலம் 12.02-1.32 மணிவரை
சந்திராஷ்டமம்: பூரம், உத்தரம்,
பூரணை விரதம்

வளவன்

**மேஷம்** – வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், வீட்டில் சில மாற்றங்களை செய்ய முற்படுவீர்கள், போசன சுகமுண்டு, கற்பனை மிகுதியான நாள்.

**ரிஷபம்** – ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், புதிய பொருட்கள் வாங்கும் எண்ணம் உருவாகும், தேவையற்ற சந்தேகங்களைத் தவிர்ப்பது நல்லது, சயனசுகக் குறைவுண்டு.

**மிதுனம்** – பொதுநல ஈடுபாட்டால் புகழ் பெறுவீர்கள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும், வருமானம் திருப்தி தரும்.

**கடகம்** – திட்டமிட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், கொடுத்த வாக்கை காப்பாற்றி மகிழ்வீர்கள், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள்.

**சிம்மம்** – பூர்வீக சொத்துக்களால் நன்மையுண்டு, மறைமுகப் போட்டிகளையும் எளிதில் சமாளிப்பீர்கள், சிந்தித்துச் செயற்பட்டு சிறப்புக்களைக் காணும் நாள், பயணங்களால் பலனுண்டு.

**கன்னி** – அச்சுறுத்தலாகத் தோன்றிய விடயம் முடிவில் ஆதாயத்தைக் கொடுக்கும், நட்பு வட்டம் விரிவடையும் நாள், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**துலாம்** – அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், சுற்றத்தார் வரவால் சுகம் காண்பீர்கள், நண்பர்களின் ஒத்துழைப்புக் கிடைக்கும் வாய்ப்புண்டு.

**விருச்சிகம்** – பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், சுபகாரியங்களில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, ஆரோக்கியத்தில் முன்னேற்றம் ஏற்படலாம்.

**தனுசு** – பொன்னான எதிர்காலம் அமைய புதிய வழி பிறக்கும், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம்.

**மகரம்** – நல்லவர்களின் தொடர்பால் நலம் காணும் நாள், செய்தொழிலில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், வீட்டுத் தேவைகளை பூர்த்தி செய்யும் எண்ணம் உருவாகும்.

**கும்பம்** – சமூகப் பணிகளில் அதிக ஆர்வம் காட்டுவீர்கள், சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காணும் நாள், வியாபார விருத்தியுண்டு, வருமானம் திருப்தி தரும்.

**மீனம்** – மனதில் உற்சாகமும் மகிழ்ச்சியும் அதிகரிக்கும், காரிய வெற்றிக்கு கடவுளை வழிபட வேண்டிய நாள், பணத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும்.

பிறர் பேசுவதை நாம் காதாலும் இதயத்தாலும் கேட்க வேண்டும்

# உர விவகாரத்தில் அரசின் திடீர் அறிவிப்பு விவசாயிகளை நிலைகுலையச் செய்துள்ளது

## சமத்துவக் கட்சி

(தருமபுரம்)

உரத்தை முற்று முழுதாகத் தடுத்து, இயற்கை உரப் பாவனையின் மூலம் விவசாயத்தை மேற்கொள்ளுமாறு விடுக்கப்பட்ட அரசாங்கத்தின் திடீர் அறிவிப்பானது விவசாயிகளை நிலைகுலையச் செய்துள்ளது.

இது உற்பத்தியில் ஈடுபடும் விவசாயிகளின் நம்பிக்கையைத் தளர்வடையச் செய்ததுடன் பயிர்ச்செய்கையில் ஈடுபடும் ஆர்வத்தையும் குறைத்திருப்பதை அவதானிக்க முடிகிறது என சமத்துவக் கட்சி தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அக் கட்சியின் பொதுச் செயலாளர் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பது, அசேதனப் பசளைக்குப் பதிலாகச் சேதனப் பசளைப் பாவனையை நாம் மறுப்பதற்கில்லை.

ஆனால் அதைச் செய்வதற்கான கால அவகாசம் விவசாயிகளுக்கு வேண்டும். வரையறுக்கப்பட்ட அளவிலான உரப் பாவனைக்கான சூழலைப் பேணிக் கொண்டு படிப்படியாக சேதனப்பசளைப் பாவனையை ஊக்கப்படுத்தும் பொறிமுறையே பொருத்தமானது.

அதுவே நடைமுறைச் சாத்தியமான வழிமுறையாகும்

இது பெரும்போகச் செய்கைக் காலமாகும். இதன் போதே மூன்று மடங்கினர் விவசாயச் செய்கையில் ஈடுபடுகின்றனர்.

இந்தச் செய்கையில் பாதிப்பும் வீழ்ச்சியும் ஏற்படுமானால் அவர்கள் மீள முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டு விடுவர். அதிலிருந்து விவசாயிகளால் உடனடியாக மீள முடியாது. எமது நாட்டில் இன்று விவசாயச் செய்கையிலேயே அதிகமானோர் ஈடுபடுகின்றனர்.

அதிலும் வடக்குக் கிழக்கில் ஏற்பட்ட போரினால் பிற தொழில்துறைகளும் உற்பத்திக் கட்டமைப்புகளும் முற்றாகப் பாதிக்கப்பட்டு, விவசாயத்தையே பெரும்பாலோனோர் தமது ஒரே வாழ்வாதாரமாகக் கொண்டிருக்கின்றனர்.

அவர்களுடைய தொழிலும் வருவாயும் வாழ்வும் இந்தப் பெரும்போகச் செய்கையிலேயே தங்கியிருப்பதால் அரசாங்கமானது நடைமுறை யதார்த்தை உணர்ந்து வரையறுக்கப்பட்ட அளவிலேனும் அசேதனப் பசளைக்கு இடமளித்து கட்டம் கட்டமாக சேதனப் பசளைப் பாவனைக்குச் செல்லும் வகையைச் செய்ய வேண்டும்.

அதுவே விவசாயிகளையும் உற்பத்தியையும் நாட்டின் பொருளாதாரத்தையும் பாதுகாக்கும். ஆகவே அரசாங்கம் தன்னுடைய தீர்மானத்தைப் பரிசீலனை செய்து விவசாயிகளையும் விவசாயத்துறையையும் வளப்படுத்த வேண்டும் என அவ்வறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (7-4-316-315)

# நான்கு ஆண்டுகளாக கடல் போக்குவரத்திற்கு தீர்வு இல்லை

## இரணைதீவு மக்கள்

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட இரணைதீவு பகுதிக்கான கடல் போக்குவரத்துக்கு இதுவரை எந்தவிதமான விமோசனமும் கிடைக்கவில்லை என்றும் இதனால் தாங்கள் அன்றாடம் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாக இரணைதீவு மக்கள் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட நீண்ட கடல் மைல் தூரத்தில் அமைந்துள்ள இரணைதீவு பகுதியில் சுமார் இருபத்து மூன்று வருடங்களுக்குப் பின்னர் மக்கள் குடியேறி வாழ்ந்து வரும் நிலையில் குறித்த பகுதியில் பல்வேறு குறைபாடுகள் காணப்படுகின்ற போதும் வாழ்வாதாரத் தொழில் வாய்ப்பை அடிப்படையாகக் கொண்டு 126 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் தற்போது வாழ்ந்து வருகின்றன.

தங்களுடைய அடிப்படைத் தேவைகளான குடிநீர் வசதி மற்றும் வாழ்விட வசதிகள் என்பன பெரும் பிரச்சினையாகவுள்ளதாக சுட்டிக்காட்டியுள்ள மக்கள் கடல்வழிப் போக்குவரத்துக்கு இதுவரை எந்தவிதமான ஏற்பாடுகளும் செய்யப்படாத நிலையில் கடந்த 4 ஆண்டுகளாக மீன்பிடி படகுகளிலேயே தாங்கள் பயணம் செய்து வருவதாக தெரிவித்துள்ளனர்.

எனவே தங்களுடைய தீவுக்கான ஒரு படகுச் சேவையை ஏற்படுத்தித் தருவதாக பல்வேறு வாக்குறுதிகள் வழங்கப்பட்ட போதும் இன்றுவரை எவ்வித வசதியும் செய்யப்படவில்லை என்றும் குறித்த தீவுப் பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். (7-4-315)

# கேரள கஞ்சா பொதிகள் மீட்பு சந்தேகத்தின் பேரில் ஒருவர் கைது



(மன்னார்)

மன்னார் பேசாலை பொலிஸ் பிரிவில் உள்ள பேசாலை 8 ஆம் வட்டார பகுதியில், சுமார் 20 கிலோ 215 கிராம் கேரள கஞ்சா பொதிகளுடன் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரவு ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பேசாலை பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில் குறித்த பகுதிக்குச் சென்று கேரள கஞ்சாப் பொதிகளை மீட்டுள்ளதோடு, சந்தேக நபரான பேசாலை 8 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த 45 வயதுடைய பெண் ஒருவரையும் கைது செய்துள்ளனர்.


மேற்படி கைது செய்யப்பட்ட நபரை மேலதிக விசாரணையின் பின் மன்னார் நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த பேசாலை பொலிஸார் நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர். (7-5-285)



யா/சங்குவேலி அரசினர் தமிழ் கலவன் பாடசாலைக்கு மருத்துவர் திருமதி.இராஜேஸ்வரி சோமசேகரன் தம்பதியினரின் பிள்ளைகள் திருமதி.பி.வைதேகி, சோ.ககனானந்தா மற்றும் சோ.குகனானந்தா ஆகியோரால் Micro Pc Systems நிறுவனத்தின் அனுசரணையில் நிதியளிக்கப்பட்டு நிர்மாணிக்கப்பட்ட புதிய கட்டடத் தொகுதி நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது.

### வைத்திய கலாநிதி ராஜேந்திராவின்

# “யாழ்ப்பாணத்தில் சத்திர சிகிச்சை வரலாறு” நூல் வெளியீடு



(யாழ்ப்பாணம்)


யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மருத்துவ பீடத்தின் சிரேஷ்ட விரிவுரையாளரும், யாழ். போதனா வைத்தியசாலை சத்திர சிகிச்சை நிபுணருமாகிய வைத்தியக் கலாநிதி சி.ராஜேந்திரா எழுதிய “யாழ்ப்பாணத்தில் சத்திர சிகிச்சை வரலாறு” என்ற நூலின் வெளியீட்டு விழா நேற்று முன்தினம் சுகாதார நடைமுறைகளுக்கு அமைய இடம்பெற்றது.

யாழ்ப்பாணம் தாதியர் பயிற்சிக் கல்லூரியில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறீசற்குணராஜா கலந்து கொண்டார். யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் மருத்துவர் சத்தியமூர்த்தி நூலை வெளியிட்டு வைத்தார்.

இந்த நிகழ்வில் இலங்கை சுகாதாரத் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் எஸ். ஶ்ரீதரன், வடக்கு மகாண சுகாதாரப் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன், போதனா வைத்தியசாலை சத்திர சிகிச்சை நிபுணர் வைத்திய கலாநிதி வி. சுதர்சன், யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடாதிபதி மருத்துவர் இ.சுரேந்திரகுமாரன், மருத்துவ பீடத்தின் முன்னாள் பீடாதிபதியும், சத்திர சிகிச்சை நிபுணருமாகிய வைத்திய கலாநிதி எஸ். ரவிராஜ், முன்னாள் துணைவேந்தரும், மருத்துவ பீடத்தின் முன்னாள் பீடாதிபதியும், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு உறுப்பினருமாகிய பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் மற்றும் போதனா வைத்தியசாலையைச் சேர்ந்த வைத்தியர்கள், தாதியர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (4-7-33)

# சந்தை வளாகத்தில் கட்டாக்காலி நாய்கள்

## கட்டுப்படுத்துமாறு கோரிக்கை



(கரணவாய்)

நெல்லியடி புதிய சந்தையில் மரக்கறிகள் கொள்முதல் செய்யும் இடங்களில், வியாபார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் இடங்களில் கட்டாக்காலி நாய்களின் தொல்லை அதிகரித்துள்ளது.

இதனால் சந்தைக்கு வருகை தரும் மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர் கொள்கின்றனர். அத்துடன் சுகாதார சீர்கேடும் ஏற்படுகிறது.

எனவே கரவெட்டி சுகாதார பிரிவினர் இதற்கு உடனடியாக தீர்வைப் பெற்றுத் தருமாறு பொது மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (4-7-60)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|
| கத்தரிக்காய் | 220 | 200 | 240 |
| உருளைக்கிழங்கு | 150 | 140 | 160 |
| பச்சைமிளகாய் | 100 | 130 | 160 |
| தக்காளி | 120 | 100 | 140 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 60 | 50 |
| கோவா | 140 | 160 | 150 |
| கரட் | 120 | 180 | 150 |
| பூசணி | 60 | 60 | 50 |
| புடோல் | 180 | 120 | 160 |
| வாழைக்காய் | 60 | 60 | 80 |
| சின்ன வெங்காயம் | 180 | 180 | 250 |
| பெரிய வெங்காயம் | 200 | 150 | 160 |
| பாகற்காய் | 450 | 400 | 480 |
| வெண்டிக்காய் | 140 | 100 | 200 |
| கருணைக் கிழங்கு | 120 | 120 | 120 |
| பயற்றங்காய் | 250 | 170 | 250 |
| லீக்ஸ் | 200 | 200 | 240 |
| பீற்றூட் | 60 | 60 | 60 |
| கறிமிளகாய் | 250 | 280 | 350 |
| முருங்கைக்காய் | 300 | 250 | 280 |
| போஞ்சி | 240 | 260 | 300 |
| கத்தரிதம்புள்ள | 200 | -- | 200 |
| கீரை - 1 பிடி | 80 | 50 | 100 |
| தேசிக்காய் | 400 | 350 | 450 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 60-70 | 50-80 |
| இராசவள்ளி | 300 | 280 | 280 |
| வெங்காயப்பூ | 350 | -- | 300 |
| முள்ளங்கி | 80 | 100 | 120 |
| பொன்னாங்காணி | 40 | 50 | 20 |
| வல்லாரை | 20 | 25 | 20 |
| ஈரப்பலா | 60 | -- | 120 |

# மதுபானப் போத்தல்களுடன் பொன்னாலையில் இருவர் கைது

(அராலி)

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பொன்னாலை பகுதியில் மதுபானப் போத்தல்களுடன் நேற்றைய தினம் இருவர் கைது செய்யப்பட்டனர்.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

வாகனம் ஒன்று சந்தேகத்திற்கு இடமான முறையில் பயணித்ததை அவதானித்த கடற்படையினர் குறித்த வாகனத்தினை சோதனையிட்டனர்.

இதன்போது அதிலிருந்த 30 பெட்டிகளில் 750 மதுபானப் போத்தல்கள் கடற்படையினரால் மீட்கப்பட்டன.

இதனையடுத்து குறித்த வாகனத்தில் காணப்பட்ட இருவரையும் கைது செய்து வட்டுக்கோட்டை பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். (4-7-104)




யாழில் படுகொலை செய்யப்பட்ட நிமலராஜனின் 21ஆம் ஆண்டு நினைவு தின நினைவேந்தல் நிகழ்வுகள் நேற்று அனுஷ்டிக்கப்பட்டன. யாழ்.ஊடக அமையத்தின் ஏற்பாட்டில் ஊடக அமையத்தில் நினைவேந்தல் நிகழ்வுகள் இடம்பெற்றன.

(படம்-சிவசாந்தன், ரவிசாந், கஜிந்தன்)

# இந்தியக் கடனுக்கும் 13 ஆவது திருத்தத்திற்கும் எவ்வித தொடர்புமில்லை- அமைச்சர் டலஸ்

(கொழும்பு)

**அரசியலமைப்பின் 13ஆவது திருத்தம் இந்தியாவிலிருந்து கடன் பெறுவதற்கான முன்நிபந்தனை அல்ல என அரசாங்கம் தெரிவித்துள்ளது.**



எரிபொருள் வாங்குவதற்காக கடன் பெற இந்தியாவுடன் பேச்சுவார்த்தை நடந்துகொண்டிருப்பதாக அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

இருப்பினும் இந்த விடயத்திற்கு அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தம் ஒரு முன்நிபந்தனையாக வைக்கப்படவில்லை என்றும் அவர் தெரிவித்தார். அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்தை முழுமையாக செயற்படுத்த இலங்கை அரசாங்கத்திடம் இந்தியா தொடர்ந்தும் வலியுறுத்தி வருகின்ற நிலையில் அமைச்சர் இதனை தெரிவித்தார்.

கடுமையான அந்நியச் செலாவணி நெருக்கடிக்கு மத்தியில் இலங்கை அரசாங்கம் எரிபொருள் கொள்வனவிற்காக 500 மில்லியன் அமெரிக்க டொலர் கடனை இந்தியாவிடம் கோரியுள்ளது.

நாட்டில் தற்போது உள்ள எரிபொருள் அடுத்த ஜனவரி வரை மட்டுமே போதுமானதாக உள்ளது என அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்திருந்ததை அடுத்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (நி-5)

## தொற்றாளர்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சி


(கொழும்பு)

கொழும்பு நகரத்தில் கொவிட் -19 தொற்றாளர்களின் எண்ணிக்கை வெகுவாகக் குறைந்துள்ளது.

கடந்த நான்கு நாட்களில் உயிரிழப்புகள் எவையும் இங்கு பதிவு செய்யப்படவில்லை என்று கொழும்பு மாநகர சபையின் பிரதான மருத்துவ அதிகாரி ருவன் விஜயமுனி தெரிவித்தார்.

மக்கள் பொறுப்பற்ற முறையில் செயற்படுவதாகவும், சுகாதார வழிகாட்டுதல்களைப் புறக்கணித்தால் நோய் மீண்டும் தலைதூக்கும் என்றும் அவர் எச்சரித்தார். (நி-5)

## சாரதியின் கவனயீனத்தால் மிதிபலகையில் இருந்து கீழே விழுந்த பெண்



(கொழும்பு)

பதுளை - கொழும்பு பிரதான வீதியின் பண்டாரவளை, ஹல்பே பகுதியில் பண்டாரவளையில் இருந்து பதுளை நோக்கிப் பயணித்த பேருந்து ஒன்றின் மிதிபலகையில் இருந்து பெண் ஒருவர் விழுந்துள்ளார். இந்தச் சம்பவம் அருகில் இருந்த சிசிரிவி கமராவில் பதிவாகியுள்ளது.

பேருந்தில் இருந்து குறித்த பெண் தனது மகளை இறக்கிவிட்டு தான் இறங்க முற்பட்ட சந்தர்ப்பத்தில் பேருந்து முன்னோக்கிச் சென்றுள்ளது. இதன்போது அவர் மிதிபலகையில் இருந்து கீழே விழுந்துள்ளார்.

இதனையடுத்து அங்கிருந்த சிலர் குறித்த பெண்ணை தூக்கிவிட்டு பேருந்துச் சாரதி மீது தாக்கல் நடத்த முற்பட்டனர். (நி-5)

## எரிபொருட்களின் விலை அதிகரிப்பை தவிர்க்க முடியாது- வலுசக்தி அமைச்சு

(கொழும்பு)

உலக சந்தையில் ஏற்பட்டுள்ள விலை அதிகரிப்பிற்கு ஏற்ப இலங்கையிலும் எரிபொருட்களின் விலையை அதிகரிப்பது அவசியம் என்று வலுசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

அந்நியச் செலாவணி கையிருப்பு குறைந்து வருவதால் பெரும் பொருளாதார நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ள இலங்கை, எரிபொருள் கொள்வனவுக்காக இந்தியாவிடம் இருந்து 500 மில்லியன் டொலர்களைக் கடனாகப் பெற்றுக் கொள்வதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளது.

இது தொடர்பான இருதரப்பு பேச்சுவார்த்தைகள் இடம்பெற்று வரும் நிலையில் அடுத்த இரண்டு வாரங்களுக்குள் கடனைப் பெற்றுக் கொள்ள முடியும் என இலங்கை வலுசக்தி அமைச்சின் செயலாளர் திருமதி. கே.டி.பி. ஒல்கா தெரிவித்துள்ளார்.

கடனைப் பெற்றுக் கொண்டாலும் எரிபொருளை உலக சந்தையில் தற்போது அதிகரித்துள்ள விலைக்கே கொள்வனவு செய்ய வேண்டியிருக்கும்.

இதனால் ஏற்கனவே இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு ஏற்பட்ட இழப்பை ஈடுசெய்ய முடியாது. இதனால் எரிபொருட்களின் விலையை அதிகரிப்பது தவிர்க்க முடியாது எனவும் அவர் தெரிவித்தார். (நி-5)

## பசுவதை தடைச்சட்டம்; அமுல்படுத்த அங்கீகாரம்

(கொழும்பு)

நாட்டில் பசுவதை தடைச் சட்டத்தை அமுல்படுத்துவதற்காக முன்வைக்கப்பட்ட ஐந்து யோசனைகளுக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

அதன்படி தற்போதுள்ள சட்டங்கள் மற்றும் விதிமுறைகளைத் திருத்தவும் அதனை வர்த்தமானியில் வெளியிடவும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளன. (நி-5)

## படுதோல்வியில் அரசாங்கம்; நாட்டை மீளக்கட்டியெழுப்ப தயார்-சஜித் சவால்

(கொழும்பு)

முதுகெலும்புள்ள ஆளுந்தரப்புப் பிரதிநிதிகள் அரசாங்கத்தைவிட்டு வெளியேற வேண்டும் என எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.



அரசாங்கத்திற்குள் இருந்துகொண்டே விமர்சனங்களை முன்வைக்காது அங்கிருந்து வெளியேறி குறித்த விமர்சனங்களை முன்வைக்குமாறும் அவர் குறிப்பிட்டுள்ளார். அதுமாத்திரமன்றி தற்போதைய அரசாங்கம் அனைத்துத் துறைகளிலும் முழுமையாகத் தோல்வியடைந்திருப்பதை மக்கள் நன்கு அறிந்துள்ளார்கள்.

இவ்வாறானதொரு சூழ்நிலையில் நாட்டின் நிர்வாகப் பொறுப்பை ஏற்றுக்கொண்டு, அதனைத் திறம்பட முன்னெடுப்பதற்கு தாம் தயாராக இருப்பதாகவும் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

நாட்டின் வளங்களை வெளிநாடுகளுக்கு விற்பனை செய்கின்ற பிரபல ஏல விற் பனை நிறுவனமாக அரசாங்கம் மாறியிருக்கின்றது என்றும் சஜித் குற்றம் சாட்டினார். (4-5)

## பாதுகாப்பான நாடுகளில் இலங்கைக்கு 145 ஆவது இடம்

(கொழும்பு)

பூகோளிய பாதுகாப்பு சுட்டெண் நிறுவனம் ஒவ்வொரு வருடமும் உலகில் மிகவும் பாதுகாப்பான நாடுகளின் பட்டியலை வெளியிடும்.

162 நாடுகளை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட அறிக்கையில் முதலாவது இடத்தில் ஐஸ்லாந்தும், இரண்டாவது இடத்தில் டென்மார்க்கும், மூன்றாவது இடத்தில் நியூசிலாந்தும் இடம் பிடித்துள்ளன.

இதனைத் தொடர்ந்து நோர்வே, ஆஸ்திரியா, கட்டார், ஜப்பான், பின்லாந்து மற்றும் அவுஸ்திரேலியா ஆகிய நாடுகள் முதல் 10 நாடுகளுக்குள் உள்ளடங்குகின்றன.

இப்பட்டியலில் இலங்கை 145 ஆவது இடத்திலும், இந்தியா 144 ஆவது இடத்திலும் உள்ளன. (நி-5)

## நாளாந்தம் பெறப்படும் கடவுச்சீட்டு எண்ணிக்கை அதிகரிப்பு

(கொழும்பு)

நாளாந்தம் பெறப்படும் கடவுச்சீட்டுகளின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

ஒருநாள் சேவையின் கீழ் சேவையை பெறுவோரின் எண்ணிக்கை 500 ஆல் அதிகரித்துள்ளதாக குடிவரவு - குடியகல்வு கட்டுப்பாட்டுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதற்கு முன்னர் ஒரு நாள் சேவையின் கீழ் சேவை பெறுவோரின் எண்ணிக்கை ஆயிரமாக காணப்பட்டதாக திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

எனினும், நாடளாவிய ரீதியில் அமுல்படுத்தப்பட்டிருந்த தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் நீக்கப்பட்டதன் பின்னர், ஒருநாள் சேவையின் கீழான விண்ணப்பங்களின் எண்ணிக்கை 1,500 ஐ கடந்துள்ளதாக குடிவரவு -குடியகல்வு கட்டுப்பாட்டுத் திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது. (4-5)


## காணி விற்பனைக்கு

நாவற்குழி - பூநகரி வீதியில் நாவற்குழிச் சந்தியில் இருந்து 500M தூரத்தில் ரெயில் பாதையைக் கடந்ததும் பிரதான வீதியில் இருந்து வலதுபுறமாக உள்ள பாதையில் இரண்டாவதாக உள்ள 2 பரப்புக் காணி 20 அடி பாதையுடன் விற்பனைக்கு உள்ளது.

தொடர்புகளுக்கு:- 077 773 8001

(8307)

# கீரிமலையில் மீளுருவாக்கம் பெற்று வரும் சிறாப்பர் மடம்



பருத்தித்துறைத் தெருமூடி மடம்



ப.புஸ்பரட்ணம்
சிரேஷ்ட பேராசிரியர்,
வரலாற்றுத்துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.

தமிழ் மக்களின் மரபுரிமை அடையாளங்களைக் கண்டறிந்து, மீளுருவாக்கம் செய்து, அவற்றைப் பாதுகாக்க வேண்டும் என்ற விழிப்புணர்வு முன்பொருபோதும் இல்லாத அளவிற்கு எம்மக்களிடையே சிறப்பாக இளைஞர்கள் மத்தியில் அண்மைக்காலங்களில் புத்தாக்கம் பெற்று வருவதைக் காண முடிகின்றது.

இதற்கு உதாரணமாகத் தொல்லியற் திணைக்கள அனுசரணையுடன் பருத்தித்துறைத் தெருமூடிமடம், புங்குடுதீவு பெருக்கு மரம், வரணி சுமை தாங்கிக்கல், சாவகச்சேரி வாரிவனேஸ்வரர் மரபுரிமை மையம் என்பன மீளுருவாக்கம் செய்யப்பட்டுள்ளதைக் குறிப்பிடலாம்.

இவ்வரிய பணிகளில் தாயக மக்களுடன் புலம்பெயர் உறவுகளும் இணைந்து ஆற்றிய பணிகள் அளப்பரியது என்றே கூறலாம். இம்மீளுருவாக்கப் பணிகளின் இன்னொரு கட்ட வளர்ச்சியாகவே தற்போது கீரிமலை சிறாப்பர் மடத்தின் ஒருபகுதி மீள்புனர்நிர்மாணம் செய்யப்பட்டிருப்பதைக் குறிப்பிடலாம்.

மடம் என்பது தமிழ் மக்களின் வாழ்வியலில் அவர்களின் ஆன்மிக ஈடுபாட்டையும், வரலாற்றையும், பண்பாட்டையும் அடையாளப்படுத்திக் காட்டும் முக்கிய மரபுரிமைச் சின்னங்களில் ஒன்றாக இருந்து வருகின்றது.

இம்மரபு இலங்கைத் தமிழரிடையே இற்றைக்கு 2300 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே தோன்றி வளர்ந்ததை அநுராதபுரம், குருநாகலில் புதுமுத்தாவை முதலான இடங்களில் கண்டுபிடிக்கப்பட்ட கல்வெட்டுக்கள் உறுதி செய்கின்றன.

யாழ்ப்பாண இராசதானி காலத்தில் பிரம்மச்சாரிகள், சந்நியாசிகள், சமயப் பக்தர்கள் முதலியோரின் நன்மை கருதி தமிழகத்திலும் இலங்கையிலும் மடங்கள் அமைக்கப்பட்டது பற்றி இவ்வரசுகாலச் செப்புபட்டயங்கள் கூறுகின்றன.

மடம் என்ற சொல் வட்டார மொழி வழக்கிற்கு ஏற்ப அம்பலம், சாவடி, அறச்சாலை, சத்திரம், தண்ணீர்ப்பந்தல் எனப் பல பெயர் கொண்டும் அழைக்கப்பட்டு வந்துள்ளன.

யாழ்ப்பாணத்தில் மோட்டார் வாகனங்களின் பாவனை அதிகரிப்பதற்கு முன்னர் கால்நடையாகவும், மாட்டு வண்டிகளிலும் பயணங்களை மேற்கொண்ட பொது மக்களின் பல தரப்பட்ட நன்மைகள் கருதி வீதி யோரங்களில் மடங்கள் அமைக்கப்பட்டிருந்ததற்கான ஆதாரங்களைத் தற்காலத்திலும் யாழ்ப்பாணத்தின் சில இடங்களில் காணமுடிகின்றது.

சில மடங்களின் அழிபாடுகள் மக்கள் வாழாத ஒதுக்குப்புறங்களிலும் காணப்படுகின்றன. அவ்விடங்கள் முன்பொரு காலத்தில் மக்களின் குடியிருப்புகள் இருந்ததற்கும், போக்குவரத்துப் பாதைகள் இருந்ததற்கும் சான்றுகளாகும்.

இம்மடங்களுடன் ஆவுரஞ்சிக்கல், சுமைதாங்கி, கேணி அல்லது சிறு குளங்கள் அமைந்திருந்த இடங்கள் யாழ்ப்பாணத்தின் பண்டைய சிறு நகரமாக அல்லது மக்கள் ஒன்றுகூடும் வணிக மையமாகவும் இருந்த இடங்களாகவும் பார்க்கப்படுகின்றன.



கீரிமலை சிறாப்பர்மடம்

இவற்றை அமைத்துக் கொடுத்தவர்கள் அக்கால யாழ்ப்பாணச் சமூகத்தில் செல்வாக்குப் பெற்றவர்கள் என்பதை இம்மரபுரிமைச் சின்னங்களில் பொறிக்கப்பட்டிருக்கும் கல்வெட்டுக்களில் இடம்பெற்றிருக்கும் குடும்பத் தலைவன் அல்லது குடும்பத் தலைவியின் வம்சப் பெயர்கள், சமூக அந்தஸ்து, அவர்களின் சமய நம்பிக்கைகள் என்பன உறுதி செய்கின்றன. இதற்கு பருத்தித் துறையில் உள்ள தெருமூடி மடம் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

இந்த நீண்டவரலாற்றின் தொடர்ச்சியை நினைவுபடுத்திக்காட்டும் யாழ்ப்பாணத்தின் முக்கிய மரபுரிமைச் சின்னங்களில் ஒன்றாக கீரிமலைச் சிறாப்பர்மடம் காணப்படுகின்றது. சீ^மலையில் 12 மடங்கள் இருந்ததாகக் கூறப்படுகின்றது. அந்த மடங்களுடன் யாழ்ப்பாணத்தில் இருந்த மடங்களுக்கெல்லாம் தலைமை மடமாகச் சிறப்பர்மடமே இருந்துள்ளது.

இந்த மடத்தை 19ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் வாழ்ந்த நமசிவாயம் கதிரவேல் என்ற கொடையாளி "நகுலேஸ்வரசுவாமிகள் தண்ணீர்ப் பந்தல்" என்ற பெயரிலேயே அமைத்திருந்தார்.

ஆயினும் அவர் சிறாப்பர் என்ற உயர் பதவியில் இருந்ததால் அவரின் பதவியை நினைவுபடுத்தி அழைக்கப்பட்ட சிறாப்பர்மடம் என்ற பெயரே தற்காலம்வரை மக்கள் மத்தியில் நிலைத்து இருப்பதைக் காண முடிகின்றது. மடம் என்பதைச் சிறிய கட்டடமாகவும், அதன் பணிகளைச் சிறியதாகவும் பார்க்கும் மரபு பலருக்கு உண்டு.

ஆனால் சிறாப்பர்மடத்தை அவ்வாறு பார்க்க முடியவில்லை. இடைக்காலத் தமிழகத்தில் தோன்றிய பல இந்து ஆலயங்கள் பொது மக்களின் வழிபாட்டுக்குரிய இடமாக மட்டுமன்றி பொதுமக்களுக்குப் பல பணிகள்ள ஆற்றும் சமூக நிறுவனமாகச் செயற்படுவதற்கு ஏற்றதாக அமைக்கப்பட்டிருந்தன.

அவற்றை நினைவுபடுத்தும் வகையில் கீரிமலைச் சிறாப்பர்மடம் பொதுமக்கள் தங்கியிருந்து ஆன்மிகம் பற்றி உரையாடுவதற்கான பெரிய திண்ணைகள், ம்க்கள் ஒன்றுகூடும் பொது மண்டபம், மக்கள் தங்கியிருப்பதற்கு வேண்டிய அறைகள், ஆன்மிகம் சார்ந்த நூலகம், பண்டகசாலை, தண்ணீர்ப் பந்தல், சமயகூடம் பொதுமக்களுக்கான கிணறுகள் என்பவற்றைக் கொண்டிருப்பது இம்மடத்திற்குரிய சிறப்பம்சங்களாகும்.

இவ்வசதிகளை ஏற்படுத்தியதற்குப் பல நோக்கங்கள் இருந்துள்ளன. அவற்றுள், நகுலேஸ்வரர் ஆலய தரிசனம், திருவிழாக்கள், ஆலயத்தின் புனித கேணியில் நீராடல், அங்கு நடைபெறும் சமயச் சடங்குகள் என்பவற்றிற்காக வரும் பக்தர்கள், சமய அபிமானிகள், சுற்றுலாப் பயணிகள் ஆகியோருக்கு தண்ணீர், மோர், உணவு என்பவற்றைத் தானமாக வழங்குவது, உள்நாட்டு, வெளிநாட்டு யாத்திரிகர்களுக்கு இலவசமாக தங்குமிட வசதிகளை அளிப்பது, கந்தபுராணத்தைப் பாட வைப்பது, நூலகத்தில் ஆன்மிகம் பற்றிய நூல்களைப் படிக்கச் செய்வது என்பன அவற்றுள் சிலவாகும்.

1985 இற்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் அதிக சமய பக்தர்களைக் கொண்ட வரலாற்றுப் பழைமைவாய்ந்த ஆலயங்களாக கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயமும், மாவிட்டபுரம் கந்தசாமி ஆலயமும் காணப்பட்டன.

இவ்வாலயங்களில் வருடந்தோறும் நடைபெற்ற முக்கிய சமய நிகழ்வுகளில், திருவிழாக்களில் உள்நாட்டிலிருந்தும், வெளிநாட்டிலிருந்தும் பல்லாயிரக்கணக்கான மக்கள் வந்து சென்ற வரலாறு காணப்படுகின்றது. அம்மக்களை ஆன்மிக வாஞ்சையுடன் உபசரித்து அவர்களுக்கு உதவியதில் சிறாப்பர்மடத்திற்கு முக்கிய பங்கிருந்தது.

இம்மடத்தின் முன்முகப்பிலும், இதன் பிரதான வாசற் பகுதிகளிலும் இடம்பெற்றுள்ள, இடம்பெற்றிருந்த சிலைகள், சிற்பங்கள், வரலாற்றுக் கதைகளை சித்தரிக்கும் புடைப்புச் சிற்பங்கள் என்பன காணப்படுகின்றன.

அவை தமிழ் அரச மரபு தோன்றிய வரலாற்றையும், யாழ்ப்பாண மக்களின் ஆன்மிக ஈடுபாட்டையும், அதன் சமகால சமூகக்கலை மரபையும் பிரதிபலிப்பதாக உள்ளன. யாழ்ப்பாணத்தில் இயற்கையாகக் கிடைத்த களிமண், சுதை, சுண்ணாம்புக்கல் என்பன கொண்டு வடிவமைக்கப்பட்ட இக்கலை வடிவங்களை அதே நிலையில் முழுமையாகப் பாதுகாக்கப்படவில்லை என்பது கவலைதரும் வரலாற்றுச் செய்தியாகும்.

வரலாற்று அறிஞர்களால் யாழ்ப்பாணத்தின் மிகப் புராதன ஆலயங்களில் ஒன்றாகக் கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயம் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

இவ்வாலயம் தோன்றிய இடம், தோன்றிய காலம் என்பவற்றையிட்டு தெளிவற்ற நிலை காணப்பட்டாலும், தற்போதைய நகுலேஸ்வரர் ஆலயத்தில் காணப்படும் உக்கிரசிங்கன் மாருதப்புரவல்லி கதை பற்றிய கலைவடிவங்கள் கி.பி. 8ஆம் நூற்றாண்டில் கதிரமலையில் (கந்தரோடை) இருந்து ஆட்சி செய்த உக்கிரசிங்கன் மாருதப்புரவல்லியின் காலத்தில் இவ்வாலயம் கட்டப்பட்டதென்பதன் அடையாளமாகப் பார்க்கப்படுகின்றது.

அக்கதை மரபை நகுலேஸ்வரர் ஆலயக் கலை வடிவங்கள் மட்டுமன்றி சிறாப்பர் மடத்தில் இருந்த, இருக்கின்ற கலைவடிவங்களும் பிரதிபலித்திருப்பது இம்மடம் அழிந்து போகாது பாதுகாக்கப்படுவது அவசியம் என்பதைக் கோடிட்டுக்காட்டுகின்றது.



கீரிமலை நகுலேஸ்வரர் கோபுரம்

2010 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் பிராந்திய தொல்லியற் திணைக்கள அலுவலகம் அமைக்கப்பட்ட காலத்திலிருந்து வடஇலங்கையின் முக்கிய மரபுரிமை இடங்கள் அடையாளம் காணப்பட்டு அவை மரபுரிமைச் சின்னங்களாக தொல்லியற் திணைக்களத்தால் பிரகடனப்படுத்தப்பட்டு வருகின்றன.

அவற்றுள் சிறாப்பர் மடம் மீளுருவாக்கம் செய்யப்பட வேண்டிய முக்கிய மரபுரிமைச் சின்னமாக அடையாளப்படுத்தப்பட்டு இருந்தது. அன்றிலிருந்து இம்மடத்தை மீளுருவாக்கம் செய்வதற்கு பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டபோதும் அம்முயற்சிகள் வெற்றி பெறவில்லை.

இந்நிலையில் இம்மடத்தைத் தோற்றுவித்த அமரர் சிறாப்பர் குடும்பத்தின் நேரடி வாரிசுகள் இம்மடத்தின் ஒரு பகுதியை மீளுருவாக்கம் செய்வதற்கு நிதியுதவியை வழங்க முன்வந்தனர். இவ்வுதவி எதிர்காலத்தில் சிறாப்பர் மடத்தை முழுமையாக மீளுருவாக்கம் செய்வதற்கு உந்துசக்தியாக இருக்கும் என நம்பலாம்.

இந்நிலையில் சிறாப்பர் குடும்பத்தின் முயற்சிக்கு அனுசரணை வழங்கிய தொல்லியற் திணைக்களத்தினர் அக்குடும்பத்தினருடன் இணைந்து இப்பணியை முன்னெடுத்துள்ளனர்.

இப்பணிக்கு யாழ்.பிராந்திய தொல்லியல் திணைக்கள உதவிப் பணிப்பாளர் நளின் விரரட்ன, பராமரிப்பு பணிப்பாளர் வருணி ஜெயதிலக, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தொல்லியல் பட்டதாரி மாணவர்கள், யாழ்ப்பாண பிராந்திய தொல்லியல் திணைக்களம் மற்றும் மத்திய கலாசார யாழ்ப்பாணச் செயலதிட்ட ஆய்வு உத்தியோகத்தர்கள் எனப் பலரும் வழங்கிய பூரண ஒத்துழைப்பு, உதவியும் பாராட்டுக்குரியவை.

இந்நிலையில் யாழ்ப்பாணக் கோட்டை மீளுருவாக்கப் பணிக்குப் பொறுப்பாக இருக்கும் பாலசுப்பிரமணியம் கபிலன் சிறாப்பர் மடத்தை மீள்புனரமைப்பைச் செய்வதற்கு பொறுப்பாக இருந்து அப்பணியைச் சிறப்பாக முடித்திருப்பது மகிழ்ச்சி தருவதாக உள்ளது.

# பத்து ஆண்டுகளின் பின் மீள்குடியேற்றுவதற்கு நடவடிக்கை



(கண்டாவளை)

கிளிநொச்சி முகமாலை பகுதியில் கடந்த 10 ஆண்டுகளாக கண்ணிவெடியகற்றும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருவதுடன் வெடிபொருட்கள் அகற்றப்பட்ட பகுதிகள் கட்டம் கட்டமாக விடுவிக்கப்பட்டு மக்கள் மீள்குடியேற்றப்பட்டுள்ளதுடன் வாழ்வாதாரப் பயிர்ச் செய்கை நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அந்த அடிப்படையில் முகமாலை பகுதியில் கண்ணிவெடி அகற்றப்பட்ட 316 ஏக்கர் காணியை பொதுமக்களிடம் மீளக் கையளிப்பது தொடர்பாக, பிரதமர் மகிந்த ராஜபக்ஷ சார்பாக, கிராமிய வீடமைப்பு மற்றும் கட்டுமானத்துறை இராஜாங்க அமைச்சின் மூத்த ஆலோசனை அலுவலர் லியனகே, அமைச்சின் பணிப்பாளர் பிறேமச்சந்திரன் ஆகியோர் விடுவிக்கப்படவிருக்கும் பிரதேசத்துக்கு நேரில் சென்று பார்வையிட்டுள்ளனர்.(7-4-315)

# கிளிநொச்சி வடக்கு வலயத்தின் செயற்பாடுகள் ஆரம்பம்

(அக்கராயன்)

கிளிநொச்சி வடக்கு கல்வி வலயத்தின் செயற்பாடுகள் நேற்று முன்தினம் திங்கட்கிழமை கிளிநொச்சி வடக்கு வலயத்தின் கல்விப் பணிப்பாளர் நாகப்பர் கந்ததாசன் தலைமையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பரந்தன் இந்து மகா வித்தியாலயத்தில் சுப்பையா நினைவு மண்டபத்தில் வலயச் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டன. பச்சிலைப்பள்ளி, கண்டாவளை ஆகிய பிரதேச பாடசாலைகள் கிளிநொச்சி வடக்கு கல்வி வலயத்தில் உள்ளடங்குகின்றன.

கிளிநொச்சி வடக்கு கல்வி வலயத்திற்கு புதிய கட்டடம் அமைக்கும் வரை பரந்தன் இந்து மகா வித்தியாலயத்தில் கிளிநொச்சி வடக்கு கல்வி வலயத்தின் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட உள்ளன.

குறித்த ஆரம்ப நிகழ்வில் பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள் கலந்து கொண்டனர். (7-4)

# ஒரு இலட்சத்து 50 ஆயிரம் மெற்றிக் தொன் சேதன உரம் தேவை

## பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் அலுவலகம்

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தில் தற்போதைய பெரும் போகப் பயிர்ச் செய்கைக்கு ஒரு இலட்சத்து 50 ஆயிரம் மெற்றிக் தொன் சேதன உரம் தேவையான நிலையில் 73 ஆயிரம் மெற்றிக் தொன் சேதன உரம் மாத்திரமே தயாரிக்கப்பட்டிருப்பதாக மாவட்ட பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் அலுவலகத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் 28 ஆயிரத்து 395 ஹெக்டேயர் நிலப்பரப்பில் பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

இதற்கென ஒரு இலட்சத்து 50 ஆயிரம் மெற்றிக் தொன் சேதன உரம் தேவையான நிலையில் 73 ஆயிரம் மெற்றிக் தொன் உரம் மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்பட்டு இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (7-5-315)

# பச்சிலைப்பள்ளியின் பட்ஜெட் மக்கள் பார்வைக்கு

(அக்கராயன்)

கிளிநொச்சி பச்சிலைப் பள்ளி பிரதேச சபையின் 2022 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டம் மக்கள் பார்வைக்கு வைக்கப்படவுள்ளதாக பிரதேச சபையின் தவிசாளர் சுப்பிரமணியம் சுரேன் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது,

நாளையிலிருந்து எதிர்வரும் 05.11. 2021 வரை பச்சிலைப்பள்ளியின் பிரதேச சபையின் தலைமை அலுவலகத்திலும் முகமாலை, இயக்கச்சி, புலோப்பளை உப அலுவலங்களிலும் பொது நூலகங்களிலும் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்திலும் மக்கள் பார்வைக்கு வைக்கப்படும் என்பதையும் சபையின் வரவு செலவுத் திட்ட முதலாவது வாசிப்பின் போது ஏகமனதாக வரவு செலவுத் திட்டம் சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்டதாகவும் தெரிவித்தார். (7-4)

# விபத்தில் உயிரிழந்த சிறுவனுக்கு கொரோனா

(நெளுக்குளம்)

வவுனியா செட்டிகுளம் முதலியார்குளம் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற விபத்தில் முதலியார்குளம் பகுதியை சேர்ந்த 15 வயதான சிறுவன் ஒருவன் மரணமடைந்திருந்தான்.

சிறுவன் பயணித்த மோட்டார் சைக்கிள் பாரவூர்தியுடன் மோதியதில் குறித்த விபத்து இடம்பெற்றது.

குறித்த சிறுவனின் சடலம் வவுனியா வைத்தியசாலையில் வைக்கப்பட்டிருந்த நிலையில் பி.சி.ஆர். பரிசோதனை முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது அவருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. (7-4-299)



இராணுவத்தின் 72 ஆவது ஆண்டு நிறைவு தினத்தை முன்னிட்டு வன்னி பாதுகாப்பு படை தலைமையகத்தின் 54 ஆவது பிரிவின் கீழ் உள்ள 542 ஆவது பிரிகேட்டின் 8 ஆவது விஜயபாகு காலாட்படையணி மற்றும் 10 ஆவது கெமுனு ஹேவா படையணிகளின் சிப்பாய்களால் மன்னார் சிலாவத்துறை பகுதியிலுள்ள வறிய குடும்பத்திற்காக நிர்மாணிக்கப்பட்ட வீடு அண்மையில் வழங்கி வைக்கப்பட்டது.

(படம்:-யது பாஸ்கரன்)

# ஒதுக்கப்பட்ட மேய்ச்சல் தரவைகளுக்குள் மாத்திரமே கால்நடைகளைக் கொண்டு செல்ல வேண்டும்

## நானாட்டான் பிரதேச செயலாளர்

(மன்னார்)

நானாட்டான் பிரதேசத்தில் உள்ள கால்நடைகளை அதன் உரிமையாளர்கள் ஒதுக்கப்பட்ட மேய்ச்சல் தரவைகளுக்கு மாத்திரமே கொண்டு செல்ல வேண்டும் எனவும், கால்நடைகள் உரிய சுகாதார அறிவுறுத்தல்களுக்கு அமைவாக தடுப்பூசி ஏற்றப்பட்டு, மாடுகளுக்கு தோடு அணிவிக்கப்பட்டு காணப்பட வேண்டும் என நானாட்டான் பிரதேச செயலாளர் எஸ்.கிரிஸ்கந்தகுமார் தெரிவித்தார்.

நானாட்டான் பிரதேசத்தில் உள்ள கால்நடை வளர்ப்பாளர்கள், பிரதிநிதிகள் மற்றும் கால்நடை வளர்ப்பாளர் சங்கத்துடன் நேற்று முன்தினம் திங்கட்கிழமை நானாட்டான் பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது குறித்த அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில்,

இதன்போது நானாட்டான் பிரதேசத்தில் உள்ள மாடுகளை மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் ஒதுக்கப்பட்ட மேய்ச்சல் தரவை பகுதிக்கு கொண்டு செல்வது தொடர்பாக ஆராயப்பட்டது.

மாடுகளைக் கொண்டு செல்கின்றவர்கள் பாலியாறு கிராம உத்தியோகத்தர் பிரிவில் தேத்தாவடி கிராமத்திற்கு கிழக்குப் பக்கமாக உள்ள "பெரு வெளி" பகுதியில் மாத்திரமே கால்நடைகளை வைத்திருத்தல் வேண்டும்.

ஏனைய இடங்களான பட்டிவெளி, பள்ளத்து வெளி, குடாவெளி, வெள்ளங்குடா போன்ற இடங்களில் மாடுகளை வைத்திருப்பது தடை செய்யப்பட்டுள்ளது.

பட்டிவெளியில் மாடுகளை வைத்துள்ளமை தொடர்பாக முகாமை செய்வதற்கு தனியாக குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

அறிவுறுத்தப்பட்ட அறிவுறுத்தல்களையும் மீறி மாடுகளை வைத்திருந்து குறித்த பிரதேச மக்களுக்கு பாதிப்பு ஏற்படுமாக இருந்தால் அடுத்த காலபோகத்தில் குறித்த மாடுகளைக் கொண்டு செல்ல அனுமதி வழங்கப்பட மாட்டாது என்றார்.

மேலும் புல்லறுத்தான் கண்டல் பிரதேசம் இம்முறை மேய்ச்சல் தரவைக்காக அடையாளம் காணப்பட்டுள்ளது.

குறித்த புல்லறுத்தான் கண்டல் பிரதேசத்தில் மாடுகளை மேய்ச்சலுக்கு விட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சுமார் 354 ஏக்கர் நிலப்பரப்பு இதற்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 25 ஆம் திகதியில் இருந்து நானாட்டான் பிரதேச கால்நடை வளர்ப்பாளர்கள் தமக்கு என ஒதுக்கப்பட்ட மேய்ச்சல் தரவைப் பகுதிக்கு தமது கால்நடைகளை கொண்டு செல்ல முடியும் என தெரிவித்தார். (7-4-285)

# ஐப்பசி மாத இராசி பலன்கள்

## 18.10.2021-16.11.2021



**பிறர் நலனில் அக்கறை காட்டும் மிதுன இராசி வாசகர்களே!**

ஐப்பசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் புதன் உச்சம் பெற்றிருக்கிறார். அவரோடு செவ்வாய் இணைந்திருக்கிறார். குருவின் பார்வை உங்கள் இராசிக்கு 2, 4, 12 ஆகிய இடங்களில் பதிகின்றது. எனவே செலவிற்கேற்ற வரவு இருக்கும்.

### துலாம் - செவ்வாய் சஞ்சாரம்

ஐப்பசி 6 ஆம் திகதி, துலாம் இராசிக்குச் செவ்வாய் செல்கிறார். உங்கள் இராசிக்கு 6, 11 ஆகிய இடங்களுக்கு அதிபதியான அவர், பூர்வ புண்ணிய ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது நிலம் தொடர்பான பிரச்சினைகள் அகலும். கிடைக்கும் நல்ல சந்தர்ப்பங்களை உபயோகப்படுத்திக் கொள்வது உங்கள் புத்திசாலித்தனம்.

### சனி - செவ்வாய் பார்வை

ஐப்பசி 7 ஆம் திகதி முதல், துலாத்தில் உள்ள செவ்வாயை, மகரத்தில் உள்ள சனி பார்க்கப் போகிறார். இதனால் சில பிரச்சினைகளை சந்திக்க நேரிடும். 6 இற்கு அதிபதியான செவ்வாயால் குடும்ப அமைதி குறையலாம். தொழிலில் கவனம் செலுத்த இயலாது. உத்தியோகத்தில் பிரச்சினை ஏற்படலாம். உடன் பிறப்புகளை அனுசரித்துச் செல்லுங்கள். அஷ்டமத்துச் சனியின் ஆதிக்கம் நடைபெறுவதால் இறை வழிபாடு அவசியம்.

### பொன்னான புதன் பெயர்ச்சி

## செலவுக்கேற்ற வரவு இருக்கும்

ஐப்பசி 13 ஆம் திகதி, துலாம் இராசிக்குப் புதன் செல்கிறார். இராசிநாதன் புதன் பஞ்சம ஸ்தானத்தில் சஞ்சரிப்பது யோகம்தான். அவர் சூரியனோடு இணைந்து 'புத - ஆதித்ய யோக'த்தை உருவாக்குவதால், பிள்ளைகளால் நன்மை விளையும். பிள்ளைகளின் மேற்படிப்பு, வேலைவாய்ப்பு, திருமணம் தொடர்பான முயற்சி வெற்றி பெறும்.




### தனுசு - சுக்கிரன் சஞ்சாரம்

ஐப்பசி 14 ஆம் திகதி, தனுசு இராசிக்கு சுக்கிரன் செல்கிறார். இக்காலத்தில் ஆடை - ஆபரண சேர்க்கை உண்டு. பயணங்களால் விரயங்கள் ஏற்படும். பழைய வாகனத்தைக் கொடுத்துவிட்டு புதிய வாகனங்களை வாங்குவீர்கள். பெண்வழிப் பிரச்சினை நல்ல முடிவிற்கு வரும். நல்ல நிறுவனங்களில் இருந்து வரும் வெளிநாட்டு அழைப்பை ஏற்பது பற்றி சிந்திப்பீர்கள். வரவிற்கேற்ற செலவு இருக்கும்.

### கும்ப - குரு சஞ்சாரம்

ஐப்பசி 27 ஆம் திகதி, குரு பகவான் கும்ப இராசிக்கு பெயர்ச்சியாகிறார். உங்கள் இராசி மீது குரு பகவானின் பார்வை பதிவதால், குருப் பெயர்ச்சிக்குப் பின்னர் நல்ல நிகழ்வுகள் நடைபெறும். தொல்லை தந்த எதிரிகள் விலகுவர். தொழில் முன்னேற்றம் உண்டு.

### பெண்களுக்கான பலன்கள்

இம்மாதம் ஆரோக்கியம் சீராகி ஆனந்தப்படுத்தும். ஆதாயம் தரும் தகவல் வந்துசேரும். கணவன் - மனைவிக்குள் விட்டுக் கொடுத்துச் செல்லுங்கள். பிள்ளைகளை உங்கள்மேற்பார்வையில் வைத்துக் கொள்ளுங்கள். குருப் பெயர்ச்சிக்குப் பிறகு, குருவின் பார்வை பலத்தால் தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும். குடும்பத்தில் சுபகாரியம் நடைபெறும். பணி புரியும் பெண்களுக்கு எதிர்பார்த்த சலுகைகளும், இடமாற்றங்களும் உண்டு. இம்மாதம் புதன்கிழமைகளில் விஷ்ணு, லட்சுமியை வழிபடுங்கள்.

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**



**இடத்திற்கேற்றபடி தன்னை மாற்றிக் கொள்ளும் கடக இராசி வாசகர்களே!**

ஐப்பசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, உங்கள் இராசியை குரு, சனி ஆகிய இரண்டு கிரகங்களும் பார்க்கின்றன. கண்டகச் சனியின் ஆதிக்கமும், தனாதிபதி சூரியனின் நீச்சமும் இருக்கிறது. எனவே மனக் குழப்பம் அதிகரிக்கும். பொருளாதாரப் பற்றாக்குறை ஏற்படும். ஆரோக்கியத்தில் அக்கறை தேவை.

## ஆரோக்கியத்தில் அக்கறை தேவை

### துலாம் - செவ்வாய் சஞ்சாரம்

ஐப்பசி 6 ஆம் திகதி, துலாம் இராசிக்கு செவ்வாய் செல்கிறார். உங்கள் இராசிக்கு 5, 10 ஆகிய இடங்களுக்கு அதிபதியான அவர், சுக ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் வேளையில் மகிழ்ச்சி அதிகரிக்கும். சொத்து விற்பனையில் எதிர்பார்த்த தொகை கிடைக்கும். தடைப்பட்ட காரியங்கள் நடைபெறும். கண்டகச் சனி ஆதிக்கத்தால் சுப விரயங்கள் ஏற்படும். ஒப்பந்தங்களில் கையெழுத்திடும்போது கவனம் தேவை.

### சனி - செவ்வாய் பார்வை

ஐப்பசி 7 ஆம் திகதி முதல், துலாத்தில் உள்ள செவ்வாயை, மகரத்தில் உள்ள சனி பார்க்கப் போகிறார். கண்டகச்சனியின் ஆதிக்கம் ஒருபுறம் சனி - செவ்வாயின் பார்வை மற்றொரு புறம். எனவே எதையும் திட்டவட்டமாகச் செய்ய இயலாது. சொத்துக்களால் சொந்தங்களுக்குள் பிரச்சினை வரலாம். பணப் பரிவர்த்தனையில் கவனம் தேவை. சனி- செவ்வாய் பரிகாரம் செய்யுங்கள்.

### பொன்னான புதன் பெயர்ச்சி

ஐப்பசி 13 ஆம் திகதி, துலாம் இராசிக்கு புதன் செல்கிறார். அங்கு சூரியனோடு சேர்ந்து 'புத - ஆதித்ய யோக'த்தை உருவாக்குகிறார். எனவே கல்வி சம்பந்தமாக எடுத்த முயற்சி கைகூடும். பொருளாதாரம் பெருகும். புதிய தொழில் தொடங்கப் போட்ட திட்டங்கள் நிறைவேறும். புகழ்மிக்கவர்கள் மற்றும் அரசியல்வாதிகள் உங்களுக்கு ஆதரவாக இருப்பர்.




### தனுசு - சுக்கிரன் சஞ்சாரம்

ஐப்பசி 14 ஆம் திகதி, தனுசு இராசிக்கு சுக்கிரன் செல்கிறார். இதனால் உத்தியோக முயற்சியில் இருந்த தடை அகலும். விலை உயர்ந்த பொருட்களை வாங்குவீர்கள். சொந்த வீடு கட்ட வாய்ப்பு உருவாகும். ஆடை -ஆபரண சேர்க்கை உண்டு. பொதுவாழ்வில் இருப்பவர்களுக்கு பொறுப்புகள் மாறலாம்.

### கும்ப - குரு சஞ்சாரம்

ஐப்பசி 27 ஆம் திகதி, குரு பகவான் கும்ப இராசிக்கு பெயர்ச்சியாகிறார். அஷ்டமத்து குருவின் ஆதிக்கம் வரப்போவதால், எதைச் செய்தாலும் கவனமாக இருங்கள். ஆரோக்கியத்திலும் அக்கறை செலுத்துங்கள். சிந்தித்து செயற்படுவதால் வாழ்வில் மாற்றம் வரும். உறவினர் பகை ஏற்படாமல் பார்த்துக் கொள்ளுங்கள்.

### பெண்களுக்கான பலன்கள்

இம்மாதம் விரயங்கள் அதிகரிக்கும். எதிர்பாராத மாற்றங்கள் வந்துசேரும். கண்டகச் சனியின் ஆதிக்கம் இருப்பதால், கடமையில் தொய்வு ஏற்படும். எதையும் திட்டமிட்டுச் செய்ய இயலாது. கணவன் - மனைவிக்குள் விட்டுக் கொடுத்துச் செல்லுங்கள். பிள்ளைகளை உங்கள் மேற்பார்வையில் வைத்துக் கொள்ளுங்கள். பணிபுரியும் பெண்களுக்கு திறமைக்குரிய அங்கீகாரம் கிடைக்காது. மருத்துவச் செலவு அதிகரிக்கும். இம்மாதம் வியாழக்கிழமைகளில் குரு பகவானை வழிபடுங்கள்.

(தொடரும்...)

# இணையவழிக் கற்றல் நடவடிக்கையால்

## மாணவர்களிடையே மனநலப் பிரச்சினைகள் அதிகரிப்பு

### மனநல மருத்துவ நிபுணர் எச்சரிக்கை

(கொழும்பு)

இணையத்தின் மூலமான கல்வி நடவடிக்கையால் மாணவர்கள் இணைய விளையாட்டுகளில் அதிகளவில் ஈர்க்கப்படுகின்றார்கள் அத்துடன் பாடசாலை கல்வி முறை குறைவடைவதால் மாணவர்களிடையே மனநலப் பிரச்சினைகள் அதிகரிக்கின்றதெனவும் கராப்பிட்டிய போதனா மருத்துவமனையின் குழந்தைகள் மற்றும் இளம் பருவ மனநல மருத்துவ நிபுணர் தர்சனி ஹெட்டியாராச்சி சுட்டிக்காட்டினார்.

இதே வேளை, பாடசாலைகள் மீண்டும் ஆரம்பிக்கப்படும் போது, இணையக் கல்வி முறையால் ஈர்க்கப்பட்ட மாணவர்கள் பாட சாலை கல்வியைத் தொடர தயங்கலாம்.

மேலும் சில மாணவர்கள் பாடசாலையை விட்டு வெளியேறும் அபாய நிலையும் உள்ளதாக அவர் குறிப்பிட்டார்.(நி-5)

# தேவையற்ற பயணங்களைத் தவிர்த்து பொறுப்புடன் செயற்படுங்கள்

### சுகாதார சேவைகள் பணிப்பாளர் வலியுறுத்து

(கொழும்பு)



சுகாதார வழிகாட்டல்களை பின்பற்றாது போக்குவரத்து கட்டுப்பாடுகளை மீறி, பயணங்களை முன்னெடுக்க வேண்டாம் என சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் அசேல குணவர்தன பொதுமக்களை வலியுறுத்தியுள்ளார்.

பதுளை பகுதிக்கு நேற்று முன்தினம் திங்கட்கிழமை விஜயம் மேற்கொண்ட அவர், ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

அத்துடன், மாகாணங்களுக்கு இடையிலான பயணக்கட்டுப்பாடுகள் இன்னும் தளர்த்தப்படவில்லை எனவும், நாடு மற்றும் சிறுவர்களின் நலனை கருத்தில் கொண்டு சுற்றுலாப் பயணங்களை தவிர்க்குமாறும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

அத்துடன், கொரோனா நோயாளிகளின் எண்ணிக்கை மீண்டும் அதிகரிக்கும் நிலையில், பொது மக்கள் பொறுப்புடன் செயற்பட வேண்டும் என்றும் மருத்துவர் அசேல குணவர்தன கேட்டுக்கொண்டுள்ளார். (நி-5)

# சீனியின் விலையை அதிகரிக்குமாறு இறக்குமதியாளர்கள் கோரிக்கை

(கொழும்பு)

சீனிக்கான கட்டுப்பாட்டு விலையை உடனடியாக நீக்குமாறு சீனி இறக்குமதியாளர்கள் சிலர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சீனி இறக்குமதியாளர்கள் 10 பேர், நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷவிடம் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளனர்.

குறித்த வர்த்தகர்களினால் நிதி அமைச்சருக்கு கடிதம் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகத் தகவல் கிடைத்துள்ளது.

குறித்த சீனி இறக்குமதியாளர்கள் 10 பேரின் கையொப்பத்துடனான கடிதத்தில் சீனியின் கட்டுப்பாட்டு விலையை நீக்குமாறும், ஒரு கிலோ சீனிக்கு 25 ரூபாய் விலை அதிகரிக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (நி-5)

# பிண்ணாக்கு விலை உயர்வு

(கொழும்பு)

பிண்ணாக்கின் விலை ஆயிரம் ரூபாவினால் அதிகரிக்கப்பட்டுள்ளது என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் செனவிரத்ன தெரிவித்தார்.

அதன்படி சந்தைகளில் 1800 ரூபாவிற்கு விற்பனை செய்யப்பட்ட ஒரு கிலோ பிண்ணாக்கு தற்போது 2800 ரூபாவாக விற்பனை செய்யப்படுவதாக அவர் தெரிவித்தார். இதன் காரணமாக கால் நடை வளர்ப்பாளர்களுக்கு மிகப்பெரிய நெருக்கடி நிலைமை ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

## மேலும் 608,000 பைசர் தடுப்பூசிகள் இலங்கைக்கு

(கொழும்பு)

இலங்கைக்கு மேலும் 608,000 பைசர் தடுப்பூசிகள் நேற்று செவ்வாய்க்கிழமை கிடைக்கப் பெற்றுள்ளன. (நி-5)

## ரயில் சேவைகள் மீண்டும் ஆரம்பம்

(கொழும்பு)

மாகாணங்களுக்கிடையில் பயணக் கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டதும், நாளை வியாழக்கிழமை முதல் ரயில் சேவைகள் மீண்டும் ஆரம்பமாகும் என்று ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

அன்றைய தினம் முதல் தினமும் 128 முதல் 130 வரையிலான ரயில் சேவைகள் இடம் பெறும் என்றும் மாகாணங்களுக்குள் மற்றும் மாகாணங்களுக்கு இடையிலும் ரயில் சேவைகள் ஆரம்பிக்கப்பட உள்ளன எனவும் திணைக்களம் தெரிவித்துள்ளது. (நி-5)

## இன்று ஒரு தகவல்

# தெருத்திட்டல்கள்

பார்த்துப் போய்யா? கண்ணு பின்னாலேயா இருக்கு?

அறிவிருக்கா?

வீட்டிலே சொல்லிட்டு வந்துட்டியா?

இப்படித் தெருவில் முன் பின் தெரியாதவர்களோடு சண்டைக்குப் போகும் பலரை நாம் அன்றாட வாழ்வில் காண்கிறோம்.

வேலை நிமிர்த்தமாகப் போய்க்கொண்டிருக்கும் ஒவ்வொருவருக்கும் இவையெல்லாம் தேவையில்லாத வேலைகளல்லவா?

மேற்கூறிய வார்த்தைகளை எவரும் அக்கறையோடு கேட்பதில்லை. உணர்ச்சி வேகத்தின் வெளிப்பாடுகளே அவை. அப்படியே அக்கறையோடு நாம் சொன்னாலும், எடுத்துக் கொள்பவர்கள் அந்த எண்ணத்தில் எடுத்துக்கொள்ள மாட்டார்கள்.

மாறாக, அவை வம்பையும் சண்டையையும் மட்டுமே வளர்க்கக் கூடியவை.

இது ஓர் அநாகரிகமான செயலாகும். தவறு என்னுடையது தான் என்று எதிராளி ஒருக்காலும் ஒப்புக்கொள்ள மாட்டான் – அதுவும் தெருவில்!

யாராக இருந்தாலும் மறுத்து, வாதம் செய்யவே முயல்வார்கள். நடுத் தெருவாதங்கள் எந்த விதமான பயனையும் அளிக்கப் போவதில்லை.

அதற்குப் பதிலாக டிராபிக் நெரிசல் தான் மிஞ்சும். நம் மூடும் அவுட்டாகிறது. போகிற இடங்களில் வேலை புரிவதில்லை. நடந்து முடிந்த அந்தத் தெருச் சம்பவம் திரும்பத் திரும்ப நினைவிற்கு வந்து மனதைப் பாடாய்ப்படுத்தும்.

ஒருவர் கண்ணை மூடிக்கொண்டு நம் வாகனத்திற்குக் குறுக்காக வந்து விழுகிறார் – அல்லது தெருவில் நமக்கு எரிச்சலை ஊட்டக்கூடிய வகையில் நடந்து கொள்கிறார் என்றால்,

அத்தகைய வரைப் பார்த்து நாம் இரக்கப்பட வேண்டும். அத்தோடு நம் பணி முடிந்து விடுகிறது.

அவருக்குப் பாடம் புகட்டுபவராக வேறு யாராவது அமையட்டும். அதற்கு நாம் வேண்டாம்.

ஒரு வேளை, நாமே ஒரு தவறைச் செய்து விடுகிறோம். அது பெரிதாக ஆகாத பட்சத்தில், எதிராளியைப் பார்த்து இலேசாக ஒரு புன்னகை!


இது போதும். முரட்டுத்தனமான வார்த்தைகளுக்கு அங்கே இடமே இல்லை!

**லேனா தமிழ்வாணன்**



# சிறுவர் அரங்கம்

## பலமும் பலவீனமும்



குட்டிகள் சந்தோஷமாக விளையாடிக் கொண்டிருந்தன. நரி மிரட்டலாக... "யாரது உள்ளே?" என்று குரல் கொடுத்தது.

குட்டி சிங்கங்கள் அலறி அடித்துக் கொண்டு ஓரமாக பதுங்கி நின்று நரியை மிரட்சியுடன் பார்த்தன.

"எங்கே உங்க ஆத்தா...? உம்... பிச்சி புழுவென்று சொல்லு. தொலைச்சிடுவேன்.." என்று மிரட்டி விட்டு போனது.

இதில் நரிக்கு அற்ப சந்தோஷம். இது தொடர்ந்து நடந்தது. சிங்கக்குட்டிகளுக்கு பயம் அதிகரிக்க ஒரு நாள் தாய்ச்சிங்கத்தை வேட்டைக்கு போக வேண்டாம் என்று தடுத்து நிறுத்தியது. தாய் சிங்கம் "ஏன்...?" என்று கேட்க, நரியின் தொல்லை தாங்க முடியவில்லை என்று நடந்ததை சொல்ல... தாய்ச்சிங்கத்துக்கு பயங்கர கோபம் வந்தது. இருந்தாலும் குட்டிகளை சமாதானப்படுத்திவிட்டு வேட்டைக்குச் செல்வது போல போய் ஒரு இடத்தில் மறைந்து நின்றது.

அது வெளியேறுவதைப் பார்த்துவிட்டு நரி வேகமாக வந்து குகைக்குள் போய் சிங்கக்குட்டிகளை மிரட்ட, பின்னாலேயே வந்த தாய் சிங்கம் கோபமாக.. "நரிப் பயலே... இன்னைக்கு நீ தொலைஞ்சே" என்று சொல்லியபடி பாய... நரி பயந்து பம்மி சிங்கத்துக்கு போக்கு காட்டி குகையை விட்டு வெளியில் வந்து தலைதெறிக்க ஓட ஆரம்பித்தது.

"விட்டேனா பார் என்று சிங்கம் அதை விடாமல் துரத்தியது.

(தொடரும்)

# மகாபாரதம்

219



பாவியான அந்த வேடன் அப்புறாவை எடுத்துத் தனது கூண்டில் போட்டுக்கொண்டு ஒரு பெரிய மரத்தை அடைந்தான். பறவைகளின் சரணாலயம் போல அம்மரம் தோற்றம் அளித்தது.

சிறிது நேரத்தில் மழை நின்றது. நீலவானம், நட்சத்திரங்களுடன் பளிச்சென தோற்றமளித்தது. குளிரால் நடுங்கிய வேடன் நேரத்தை யூகித்து அறிந்தான். வீடு செல்வதற்குரிய நேரம் அல்ல அது.

எனவே எஞ்சிய இரவுப் பொழுதை அம் மரத்தடியிலேயே கழிக்க எண்ணினான். அம் மரத்திற்கு வணக்கம் செலுத்திவிட்டு, இலைகளை பாயாகப் பரப்பினான்.

ஒரு கல்லையே தலையணையாகக் கொண்டு படுத்தான். தூக்கம் வந்தது.

அம்மரத்தின் கிளையில் ஆண்புறா ஒன்று தன் இணையுடன் வாழ்ந்து வந்தது. காலையில் இரை தேடச் சென்ற அப்பெண் புறா இன்னும் திரும்பவில்லை.

ஆண் புறா வருத்தத்துடன் "பெருமழையில் என் பெண் புறாவிற்கு என்ன ஆயிற்றோ எனத் துன்புற்றது. என்மனைவி இல்லா வீடு சுடுகாடு போல தோன்றுகிறது, மகன், மகள், பேரன், பேத்தி இப்படி வீட்டில் யார் இருந்து என்ன பயன்? மனைவியில்லையெனில் வாழ்க்கை ஏது?" எனப் புலம்பி அழுதது ஆண் புறா.

இந்த அழுகை ஒலி வேடனின் கூட்டில் அடைபட்டிருக்கும் பெண் புறாவின் காதில் விழுந்தது. "என் கணவர் என் மீது எவ்வளவு அன்பு வைத்துள்ளார். நான் உண்மையில் பாக்கியசாலிதான்.

எந்தப் பெண் கணவனால் அன்புடன் நேசிக்கப்படுகிறாளோ, அவள் மகிழ்ச்சியின் எல்லைக்கே போய் விடுகிறாள்.

பெண்களுக்கு, எவன் அக்னி சாட்சியாய் மணக்கிறானோ அவன் தான் தெய்வம். எந்தப் பெண் கணவனால் பாராட்டப்படவில்லையோ அவள் வாழ்க்கை காட்டுத் தீயால் பற்றப்பட்ட பூங்கொத்து சாம்பல் ஆவது போல சாம்பல் ஆகும்" என்று தன் கணவனின் அன்பை எண்ணி மகிழ்ந்தது.

அதே நேரத்தில் கூண்டில் அடைப்பட்டுக் கிடப்பதால் துன்புற்றது. (தொடரும்)

மேன்மைக்குரிய அனைத்துச் சாதனைகளும் ஊக்கத்தினாலும் இதயபூர்வமாகவும் செய்யப் பட்டவையே! – ஜேம்ஸ் ஆலன்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## வடக்கில் மந்தமடைந்துள்ள கால்நடை வைத்தியசாலைகள்

வட பகுதியிலுள்ள கால்நடை வைத்திய சாலைகளின் இயங்குநிலை திருப்தியாக இல்லை என்பது பொதுமக்களின் கருத்தாக உள்ளது.

குறிப்பாக வடபகுதியில் கால்நடை வளர்ப்பு முயற்சிகளுக்கு அரச தரப்பில் இருந்து எந்த விதமான ஊக்குவிப்புகளும் இல்லை என் பதுதான் உண்மை.

ஒரு சில கால்நடை வைத்தியர்களும் அங்கு பணியாற்றுபவர்களும் கடமை உணர்வுடன் செயற்பட்டாலும் பெரும்பாலானவர்கள் ஏனோ தானோ என்ற மனநிலையிலேயே பணி யாற்றுகின்றனர்.

தவிர, கால்நடைகளுக்கு நோய் ஏற்படும் போது அதற்கு உரிய சிகிச்சைகளைப் பெற் றுக் கொள்வதில் கால்நடை வளர்ப்போர் மிகப் பெரும் கஷ்டங்களை அனுபவிக்கின்ற னர்.

பல சந்தர்ப்பங்களில் கால்நடை வைத் தியர்களின் உதவிகள் கிடைக்காமலே, மிகப் பெறுமதி வாய்ந்த கால்நடைகள் இறந்து போனதான பதிவுகள் நிறையவே உண்டு.

இதற்கு மேலாக, சில கால்நடை வைத் தியசாலைகளில்; அங்கு வருகின்றவர்களைத் துரத்திவிடுவதற்கு சிற்றூழியர்கள் எந்நேர மும் தயாராக இருப்பதான தகவல்களும் உண்டு.

உண்மையைக் கூறப்போனால், வட பகுதி யில் கால்நடை வைத்தியசாலைகளுக்குச் செல்வதைத் தவிர்த்துள்ள பண்ணையாளர் கள், தனியார் கால்நடை வைத்தியசாலை களுக்குச் செல்வதைக் காண முடிகிறது.

இத்தகைய நிலைமைகள் காரணமாக கால்நடை வளர்ப்பில் ஈடுபடுகின்றவர்கள் அதிலிருந்து விடுபட்டு ஐயா! இனிப்போதும். இந்தப் பக்கம் வேண்டாம் என்று விலகிக் கொள்கின்றனர்.

தவிர, சில கால்நடை வைத்தியர்களுக்கு வாகன வசதிகள் இன்மையால் அவர்கள் வெளிக்களப் பணியைச் செய்ய முடியாமல் இருப்பதாகக் கூறுகின்றனர்.

என்றாவது ஒருநாள் வாகனம் தரப்படும் போது, அதிவேகச் சுற்றுப்பயணமாக சுடுகுது மடியைப் பிடி என்று கால்நடை வைத்திய சாலை தூதுக்குழுவினர் வெளிக்களத் தரி சிப்பை முடித்துக் கொள்கின்றனர்.

இவ்வாறு தொட்டு விட்டு ஓடுகின்ற வெளிக் களத் தரிசிப்பு, அறிக்கை எழுதுவதற்கு உதவு மேயன்றி மற்றும்படி கால்நடை வளர்ப் போருக்கு எந்தப் பயனும் இல்லை என்பது தான் நிறுதிட்டமான உண்மை.

இதை நாம் கூறுவது கால்நடை வைத்திய சாலைகளின் இயங்கு நிலை தொடர்பில் அதி காரிகள் கவனம் செலுத்துவார்கள் என்பதற் காகவல்ல, அவர்களைப் பொறுத்தவரை அவர்கள் அனைவரிடமும் நிறைந்த தொழில் ஒற்றுமை இருக்கிறது.

ஆனாலும் இந்த உண்மைகள் பொதுமக் கள் தரப்பில் பேசுபடுபொருளாக உள்ளது என் பதையாவது சம்பந்தப்பட்டவர்கள் அறிய வேண்டும் என்பதற்காகவே இஃது எழுதப்படு கிறது.

எதுவாயினும் இதய சுத்தியுடன் பணியாற் றும் கால்நடை வைத்தியர்கள் மற்றும் உத்தி யோகத்தர்களை பொதுமக்களின் வாழ்த்து நிச்சயம் வாழ வைக்கும்.

## கட்டுநாயக்க விமான நிலைய பணியாளர் சுமார் 7 கோடி மதிப்புள்ள 48 தங்க பிஸ்கட்டுகளுடன் கைது

(கொழும்பு)

தங்க பிஸ்கட்களை தனது உடலில் மறைத்து வைத்துக் கொண்டு கட்டுநாயக்க விமான நிலையத்தில் இருந்து வெளியேற முற்பட்ட நபர் ஒருவர் கைது செய்யப் பட்டுள்ளார்.

நேற்று அதிகாலை 2 மணியளவில் குறித்த நபர் கைது செய்யப்பட் டுள்ளதாக தெரிவிக்கப் படுகின்றது.

விமான நிலைய துப் புரவு செய்யும் பிரிவில் கடமையாற்றும் 25 வய துடைய இளைஞன் ஒரு வரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாக தெரி விக்கப்படுகின்றது.

குறித்த இளைஞனி டம் இருந்து 4,848 கிராம் நிறையுடைய 48 தங்க பிஸ்கட்கள் கைப் பற்றப்பட்டுள்ளதாக தெரி விக்கப்படுகின்றது.

குறித்த தங்க பிஸ்கட் கள் சுமார் 7 கோடி ரூபாய் பெறுமதியுடையவை என தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த தங்க பிஸ்கட் கள் அரசுடமையாக்கப் பட்டுள்ளதாக தெரிவிக் கப்படுகின்றது. (ம-3)

## புத்தளத்தில் புதையல் தோண்டிய நால்வர் கைதாகி மறியலில்

(புத்தளம்)

பல்மை பொலிஸ் பிரி வுக்குட்பட்ட மதவாக்கு ளம் வெந்தக்கடுவ பிர தேச வனப்பகுதியின் பாறைப் பகுதியில் புதை யல் தோண்டினார்கள் என்ற குற்றச்சாட்டின்கீழ் கைது செய்யப்பட்ட நால் வரை இம்மாதம் 26 ஆம் திகதி வரை விள க்கமறியலில் வைக்கு மாறு உத்தரவிடப்பட்டுள் ளது.

புத்தளம் பொலிஸ் அத்தியட்சகரின்கீழ் இய ங்கும் குற்ற விசார ணைப் பிரிவினருக்கு கிடைத்த இரகசியத் தக வலின் அடிப்படையில் நேற்று முன்தினம் குறி த்த பிரதேசத்தில் மேற் கொண்ட விசேட சுற்றி வளைப்பின்போதே சந் தேகநபர்கள் கைது செய் யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் மதவாக் குளம், தெஹிவளை, துனகஹ மற்றும் மினு வாங்கொடை ஆகிய பகு திகளைச் சேர்ந்தவர்கள் எனவும் 22, 26, 37, 67 ஆகிய வயதுடைய வர்கள் எனவும் பொலி ஸார் குறிப்பிட்டனர்.

சந்தேகநபர்கள் குறி த்த வனப்பகுதியின் பாறைப் பகுதியில் இர ண்டு அடி விட்டமும் 12 அடி நீளமும் கொண்ட பாரிய குழியொன்றை தோண்டியுள்ளதாகவும் அந்த பாறைக் குழிக்குள் உள்ளே இறங்குவதற்கு மரத்தினால் செய்யப்பட்ட ஏணி ஒன்றையும் பயன் படுத்தியுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித் தனர்.

இதனையடுத்து, நான்கு சந்தேகநபர் களையும் கைது செய்த குற்ற விசாரணைப் பிரி வின் அதிகாரிகள், புதை யல் தோண்டுவதற்காக சந்தேகநபர்களால் பய ன்படுத்தப்பட்டதாக கூற ப்படும் சில உபகரணங் களையும் கைப்பற்றியுள் ளனர்.

இதனையடுத்து இம் மாதம் 26 ஆம் திகதி வரை இவர்களை விளக் கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள் ளார். (ம-3)

## ஐஸ் போதைப்பொருளுடன் திருகோணமலையில் இளைஞன் கைது

(திருகோணமலை)

திருகோணமலை - கோமரங்கடவல பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட கந் தமலாவ பகுதியில் ஐஸ் போதைப்பொருளுடன் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த இளைஞரிட மிருந்து 800 மில்லி கிராம் ஐஸ் போதைப் பொருள் கைப்பற்றப்பட் டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கோமரங்கடவல பொலிஸ் பொறுப்பதிகா ரிக்கு வழங்கப்பட்ட இர கசிய தகவலின் அடிப் படையில் குறித்த இளை ஞர் சோதனைக்கு உட்ப டுத்தப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் கோமரங்கடவல - கந்த மலாவ பகுதியைச் சேர் ந்த 21 வயது இளைஞன் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட குறித்த இளைஞர் ஐஸ் போதைப்பொருள் விற் பனையில் ஈடுபட்டு வரு வதாக ஏற்கனவே முறை ப்பாடு கிடைத்துள்ள நிலையில் தொடர்ச்சி யாக கண்காணிப்பு நட வடிக்கையில் பொலிஸார் ஈடுபட்டுவந்த நிலையில் நீண்ட நாட்களுக்கு பின் கைது செய்யப்பட்டுள்ள தாக பொலிஸார் தெரி விக்கின்றனர்.

குறித்த இளைஞனை திருகோணமலை நீதி மன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ள தாகவும் தொடர்ச்சியாக விசாரணைகளை முன் னெடுத்து வருவதாகவும் கோமரங்கடவல பொலி ஸார் தெரிவிக்கின்றனர். (ம-3)


## மின்சாரம் தடைப்படும்

உயர்அழுத்தமற்றும் தாழ் அழுத்த மின் விநி யோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும்பரா மரிப்பு வேலைகளுக் காக நாளை 21ஆம்திகதி வியாழக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணிவரை **யாழ். பிரதேசத் தில்** வல்லான், ஆல டிச் சந்தி, இறுப்பிட்டி, கேரதீவு, குறிகாட்டு வான், மடத்துவெளி, நடுவுக்குறிச்சி, புங்குடு தீவு ஆகிய ஆகிய பிர தேசங்களில் மின்சா ரம் தடைப்படும். (4-5)

## மருத்துவக் குறிப்பு

ஊமத்தை இலைச்சாறு, நல்லெண்ணெய் சம எடை சேர்த்துக் காய்ச்சி காதில் இரண்டு மூன்று சொட்டுகள் விட்டால் காதில் சீழ் வடிவது நிற்கும்.

## ஸ்ரீ இராமகிருஷ்ணரின் அமுதமொழிகள்



### குருவும் சீடரும்

நாட்கள் கடந்தன. அது எலும்பும் தோலுமாக ஆகிவிட்டது. பயம் காரணமாக இரை தேடிக்கூட பகல்வேளையில் வெளியே வருவதில்லை. எப்போதாவது இரவுவேளையில் மட்டும் வெளியே வந்தது. மந்திர உபதேசம் பெற்றதிலிருந்து அது யாரையும் துன்புறுத்துவதில்லை. மண், இலை, உதிர்ந்த பழங்கள் இவற்றைத் தின்று உயிர் வாழ்ந்தது.

'இப்படி ஏறக்குறைய ஓர் ஆண்டு கழிந்தது. பிரம்மச்சாரி அந்த வழியாக மறுபடியும் வந்தார். வந்ததும் பாம்பைப்பற்றி விசாரித்தார்.

'அந்தப் பாம்பு இறந்துவிட்டதாகச் சிறுவர்கள் சொன்னார்கள்.' பிரம்மச்சாரி அதை நம்பவில்லை. தான் உபதேசித்த மந்திரத்தின் பலனை அடையாமல் பாம்பு இறந்திருக்க முடியாது என்பது அவருக்குத் தெரியும். எனவே இங்கும் அங்கும் தேடியபடி தான் கொடுத்த பெயரைச் சொல்லி அழைத்தார்.

(தொடரும்)

# பல யுத்த களங்களையும் ஆக்கிரமிப்புக்களையும் கண்ட ஆப்கானிஸ்தான்

24

கலாநிதி க.தவலிங்கம் ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்



இந்த பட்டியலில் அமெரிக்க படையெடுப்புக்குப் பிறகு நாட்டின் முன்னாள் ஜனாதிபதி கர்சாய் அல்லது அப்துல்லா அப்துல்லா மட்டும் இல்லை. அவர்களுடன் போர் வீரர் அப்துல் ரஷீத் தோஸ்தம், முன்னாள் துணைத் தலைவர் அம்ருல்லா சலே மற்றும் பஞ்ஷீர் எதிர்ப்புத் தலைவர் அஹ்மத் மசூத் ஆகியோரும் அடங்குவர். எனவே அவர்களுடனும் பேச்சுவார்த்தை நடத்த வேண்டி ஏற்படும்.

தலிபான்களைப் பொறுத்தமட்டில் அவர்களில் ஆறு குழுக்கள் இருக்கின்றன. அதில் இரு குழுக்கள் பாகிஸ்தான் சார்புடையவை. பாகிஸ்தானின் அடிமைகள் போன்றவை. ஒரு குழுவுக்கு சீனாவின் மறைமுக ஆதரவு உண்டு. மற்றைய மூன்று குழுக்களும் எந்த நாட்டையும் சாராதவை. தலிபான்கள் எந்தவொரு நிலையான ஆட்சி அமைப்பிலும் செல்வாக்கு மிக்க போர் வீரர்கள் மற்றும் உஸ்பெக்குகள், தாஜிக்ஸ் மற்றும் ஹசாராக்களின் பிரதிநிதிகளை உள்ளடக்கியிருக்க வேண்டும் என்பதை உணர்ந்து செயற்படாவிட்டால் 1990 களில் வெடித்த அதே உள்நாட்டு மோதலில் நாடு விழும் அபாயம் உள்ளது என்று கூறப்படுகிறது.

### ஆப்கானிஸ்தானில் இந்திய முதலீடுகள் என்னவாகும்?

ஆப்கானிஸ்தானில் இந்தியா மேற்கொண்டிருக்கும் வளர்ச்சிப் பணிகளுக்காக ஏறத்தாழ மூன்று பில்லியன் டொலர் முதலீடு செய்யப்பட்டிருக்கிறது. ஆப்கானிஸ்தானின் 34 மாகாணங்களிலும் இந்தியா முன்னெடுத்திருக்கும் வளர்ச்சித் திட்டங்கள் செயற்படுகின்றன. பள்ளிக்கூடங்கள், சாலைகள், 60 இற்கும் மேற்பட்ட சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் என்று இந்தியா முன்னெடுத்திருக்கும் பணிகள் ஏராளம்.

ஆப்கான் பாராளுமன்றக் கட்டடம், ஸ்டோர் அரண்மனை புதுப்பித்தல், காபூல் நதியில் ஷாடூட் அணை. சிம்தாளா மின்நிலையம், சர்மா அணை, தேசிய வேளாண் தொழில்நுட்பக்கல்லூரி, சாலைப் பணிகள் என்று இந்தியா ஆப்கானிஸ்தானின் வளர்ச்சிக்கு செய்திருக்கும் பங்களிப்புகள் ஏராளம். இப்போது தலிபான் ஆட்சி ஏற்பட்டு விட்டதால் இந்தியாவின் முதலீடுகளுக்கு என்னவாகும் என்ற கேள்விக்கு இப்போது பதில் கிடைக்காது.

அமைதி ஒப்பந்தம் கைச்சாத்தான பின் முதலீடுகளைக் குறைப்பதற்கு இந்தியா சில நடவடிக்கைகளை எடுத்திருந்தது. ஏப்ரல் மாதம் ஹெராட் மற்றும் ஜலாலாபாத் பகுதியில் செயற்பட்டு வந்த இந்திய அரசின் திட்டங்களை மூடிவிட்டு இந்திய அதிகாரிகளைத் திரும்ப அழைத்தது. அதன் பின்பு கந்தகார் மற்றும் மசார் ஆகிய பகுதியில் இருந்த இந்திய தூதரகத்தை மூடியது. இதனால் காபூல் நகரத்தில் இருக்கும் தூதரகம் மட்டும் இயங்கி வந்தது.

ஆப்கானிஸ்தான் நாட்டை மொத்தமாகத் தலிபான்கள் கைப்பற்றியதால், இந்தியா- ஆப்கானிஸ்தான் மத்தியில் செய்யப்பட்ட bilateral trade ஒப்பந்தம் கடுமையாகப் பாதிக்கப்படும். இதனால் இந்தியாவின் ஏற்றுமதி வர்த்தகம் பெரிய அளவில் பாதிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஆப்கானிஸ்தான் நாட்டில் இந்தியா செய்த முதலீடுகள் மூலம் இந்தியாவில் தயாரிக்கப்பட்ட பொருட்களைச் சந்தைப்படுத்த புதிய வாய்ப்புக் கிடைத்தது. ஆனால் தற்போது ஆப்கானிஸ்தானைத் தலிபான்கள் கைப்பற்றியதால் இனி அது சாத்தியமாகாது போகலாம்.

ஆப்கானிஸ்தான் நாட்டில் இருந்து இந்தியாவிற்கு உலர்ந்த திராட்சை, வால்நட், பாதாம், அத்தி, பைன்நட், பிஸ்தா, உலர்ந்த ஆப்பிரிகாட் மற்றும் பழங்களான ஆப்பிரிகாட், செர்ரி, தர்பூசணி மற்றும் சில மருத்துவக் குணம் நிறைந்த மூலிகைகள் இறக்குமதி செய்யப்படுகின்றன.

இதேபோல் இந்தியாவில் இருந்து ஆப்கானிஸ்தான் நாட்டிற்கு டீ, கோப்பி, மிளகு, பருத்தி மற்றும் இதர வர்த்தகப் பொருட்களும் அதிகளவில் ஏற்றுமதி செய்யப்படுகிறது. தற்போது தலிபான்கள் ஆப்கானிஸ்தானை கைப்பற்றியதன் மூலம் இரு நாடுகளுக்கும் மத்தியிலான வர்த்தகம் தடைப்பட்டுள்ளது.

தலிபான் அமைப்பின் செய்தி தொடர்பாளர் சுஹைல்ஷாஹீன், "ஆப்கானிஸ்தானில் இந்தியா உருவாக்கியுள்ள கட்டமைப்புகள் மற்றும் வளர்ச்சி பணிகள் பாராட்டுக்குரியது. அதை அடுத்த கட்டத்திற்கு எப்படிக் கொண்டு செல்வது என்பதைப் பார்ப்போம்" என்று கூறியது இந்தியாவுக்கு ஒரு மகிழ்ச்சியான செய்தியாக இருக்கும்.

இந்தியா – தலிபான் மத்தியிலான உறவைத் தொடர்வதும், கட்டமைப்பதும் மிகவும் கடினம். இதற்கு மிக முக்கிய காரணம் தலிபான்கள் ஏற்கனவே பாகிஸ்தான் மற்றும் சீனாவுக்குச் சாதகமாக உள்ளனர். இந்த நிலையில் இந்தியா - தலிபான் உறவு மேம்படுவது சாத்தியமாகுமா? என்பது கேள்விக் குறியே!

"ஆப்கானிஸ்தான் நிலைமையை தனக்கு சாதகமாக்கிக்கொள்ள, தனது வளர்ந்து வரும் பொருளாதார மற்றும் இராணுவ ஆதிக்கத்துடன் கூடவே மென்மையான அணுகுமுறையை இந்தியா கடைப்பிடிக்க வேண்டும். இது புத்திசாலித்தனமான இராஜதந்திரத்தின் மூலம் மட்டுமே சாத்தியமாகும் என்கிறார்கள் அரசியல் வல்லுநர்கள்.

ஒரு இஸ்லாமிய அரசை நிறுவுவது தான் தங்கள் நோக்கம் என்றும், எந்த நாட்டையும் அச்சுறுத்த மாட்டோம் என்றும் தெரிவித்திருக்கிறார்கள். ஆனால் தலிபானையும் அல்கொய்தாவையும் பிரிக்க முடியாது என்று கூறும் நிபுணர்கள், அல்கொய்தாவின் உறுப்பினர்கள் சண்டைப்பயிற்சி எடுத்ததையும் குறிப்பிடுகிறார்கள். தலிபான்கள் ஒரு ஒருங்கிணைந்த குழுவாக செயற்படவில்லை என்பதும் முக்கியமானது. சில தலைவர்கள் பிரச்சினையை உருவாக்காமல் மேலை நாடுகளிடமிருந்து விலகி இருக்க நினைக்கலாம்.

வேறு சிலரோ அல்கொய்தாவிடமிருந்து பிரிவதில் தயக்கம் காட்டலாம். ஐ.எஸ்.கே.பி. என்ற இஸ்லாமிய அமைப்பின் கிளை ஒன்று கோரசான் மாகாணத்தில் இயங்குகிறது. அவர்களைத் தலிபான்கள் எதிர்க்கிறார்கள். தலிபான்களைப் போலவே இவர்களும் அமெரிக்கா மற்றும் நேட்டோவால் பதவி இறக்கப்பட்டவர்கள்தான். படைகள் விலகிய பிறகு இவர்கள் மீண்டும் இணையலாம். இந்த அமைப்பில் சில நூறு வீரர்களிலிருந்து 2000 வீரர்கள் மட்டுமே உண்டு என்றாலும், இவர்கள் பிரச்சினையை உருவாக்கலாம்.

### மூட்டை, முடிச்சுகளுடன் கால்நடைகள் போல நடந்து செல்லும் ஆப்கானிஸ்தான் அகதிகள்

ஆப்கானிஸ்தான் நில எல்லைகளை தலிபான்கள் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொண்டு, உரிய ஆவணங்களுடன் கூடிய வியாபாரிகளை மட்டுமே எல்லை தாண்டிச் செல்ல அனுமதிப்பதாக சொன்னாலும், ஆயிரமாயிரம் பேர் எந்த ஆவணமும் இன்றி உயிர்ப் பயத்தால் ஆப்கானிஸ்தானை விட்டு கடந்து செல்ல ஒவ்வொரு நாளும் முயற்சிக்கிறார்கள் என தகவல்கள் சொல்கின்றன. துப்பாக்கிகளை கைகளில் ஏந்திக் கொண்டு திரிகிற தலிபான் ஆளுகையில் நமது உயிர்களுக்கும், உடைமைகளுக்கும் உத்தரவாதம் இல்லை என்று ஆப்கானிஸ்தானியர்கள் முடிவுக்கு வந்து விட்டார்கள். அதனால் தான் அவர்கள் மூட்டை, முடிச்சுகளோடு, பிள்ளை குட்டிகளோடு கூட்டம் கூட்டமாக இடம் பெயர்ந்து கொண்டிருக்கிறார்கள். எங்கேபோவது, எப்படிபோவது, எதில் போவது என எதிலும் திட்டமிடப்படாத கண்ணீர் வாழ்க்கை, அவர்களுக்கு சொந்தமாகிவிட்டது.

அமெரிக்கா ஏற்கனவே 1 இலட்சத்து 23 ஆயிரம் மக்களை ஆப்கானிஸ்தானில் இருந்து வெளியேற்றியதாக கணக்கு கூறியது. அவர்களில் எத்தனை பேர் ஆப்கானிஸ்தானியர்கள் என்ற புள்ளி விபரம் தெரிவிக்கப்படவில்லை. ஏற்கனவே 22 இலட்சம் ஆப்கானிஸ்தானியர்கள் அண்டை நாடுகளில் அகதிகளாய் குடியேறி இருக்கிறார்கள். இப்போது 35 இலட்சம் மக்கள் தங்கள் வீடுகளை விட்டு வெளியேற வேண்டிய கட்டாயம் ஏற்பட்டிருப்பதாக சொல்கிறார்கள்.

ஆயிரக்கணக்கான மக்கள் கால்நடைகள் போல ஆப்கானிஸ்தானில் இருந்து பாகிஸ்தானுக்கு குடும்பம், குடும்பமாக நடந்து சென்று கொண்டிருப்பதாக அங்கிருந்து வரும் தகவல்கள் கூறுகின்றன. ஆப்கானிஸ்தானிய அகதிகளை ஏற்க மாட்டோம் என்று பாகிஸ்தான் கூறினாலும் ஸ்பின்போல்டாக் சாமன் எல்லை மூடப்படவில்லை என்கிறார்கள். ஒரு நாளைக்கு 20 ஆயிரம்பேர் அந்த எல்லை வழியாக பாகிஸ்தானில் தஞ்சம் புகுகிறார்களாம். இதற்கு செயற்கை கோள் படங்களை ஆதாரமாக காட்டுகிறார்கள்.

ஈரானும் ஆப்கானிஸ்தான் அகதிகளுக்கு புகலிடம் அளித்து வருகிறது. தனது 3 மாகாணங்களில் அது அகதிகளுக்காக அவசரகால கூடாரங்களையும் அமைத்து தந்திருக்கிறது.

(தொடரும்...)

## 18 பேர்...

றுக்குள்ளாகி உயிரிழந்தோரின் எண்ணிக்கை 13,525 ஆக அதிகரித்துள்ளது. (ம-3)

## கூட்டமைப்பின்...

லுள்ள அவரது இல்லத்தில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இதன்போது சமகால விடயங்கள் தொடர்பில் பேசப்பட்டுள்ளன. (ம-3)

## பட்டதாரி பயிலு...

ளது.

மேலும் பட்டதாரி பயிலுநர்களுக்கு ஆசிரியர் நியமனம் வழங்குவது தொழிலாளர் திருட்டு என்றும் குற்றம் சுமத்தியுள்ளது.

நேற்று காலை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது தொழிற்சங்கத்தின் தலைமை செயலாளர் ஜோசப் ஸ்டாலின் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

தொழிற்சங்க நடவடிக்கையை நாசப்படுத்த சில அரச அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து வருகின்றனர். வியாழன் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் அனைத்து பாடசாலைகளின் ஆசிரியர்கள் மற்றும் அதிபர்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபடவுள்ளனர்.

ஒக்ரோபர் 21ஆம் திகதி பணிக்குத் திரும்பாவிட்டால், அண்மையில் ஆசிரியர் நியமனம் வழங்கப்பட்ட பட்டதாரிகளின் வேலைவாய்ப்பு உறுதி நிச்சயமற்றது என்று கல்வி அமைச்சின் செயலாளர் பத்திரிகைகளுக்கு ஒரு கடிதத்தை வெளியிட்டார்.

பொது நிர்வாக அமைச்சு அவர்களின் வேலைநிறுத்த நடவடிக்கையில் தலையிட நடவடிக்கை எடுத்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

தற்போது 18 ஆயிரம் பட்டதாரிகள் மாதச் சம்பளமாக 20 ஆயிரம் ரூபாய்க்கு வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ளனர். இது தொழிலாளர் திருட்டு.

இந்த பட்டதாரிகள் தொழிற்சங்க நடவடிக்கையை நாசப்படுத்த பயன்படுத்தப்படுகின்றனர் என்றார். (ம-3)

## அதிக தொற்றா...

நோய் அறிகுறிகளற்ற கோவிட் வைரஸ் தொற்றாளர்கள் அதிகளவில் சமூகத்தில் உள்ளனர் என சுட்டிக்காட்டும் பொது சுகாதார பரிசோதகர் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹன, பி.சி.ஆர் அல்லது அன்டிஜன் பரிசோதனைகளை அதி கரித்து தொற்றுநோயாளர்களை அடை யாளங் காண நடவடிக்கை எடுக்க வேண் டும் எனவும் வலியுறுத்துகின்றார்.

கோவிட் வைரஸ் பரவல் நிலைமைகள் கட்டுப்பாட்டில் உள்ளதையடுத்து ஒரு சில தினங்களில் நாட்டின் செயற்பாடுகள் வழமைக்கு திரும்பும் என கோவிட் கட்டுப்பாட்டு செயலணி உள்ளிட்ட தரப்பினர் தெரிவித்துள்ள நிலையில் பொது சுகாதார அதிகாரிகளின் நிலைப்பாடுகள் மற்றும் அவதானிப்புகள் குறித்து வினவியபோதே அவர் இதனைக் கூறினார். (ம-3)

## காரைநகரில்...

ளான நிலையில், அதிலிருந்து மீட்கப்பட்ட இருவர் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

படகிலிருந்து மற்றுமொருவர் காணாமல்போயுள்ள நிலையில் அவர் சடலமாக மீட்கப்பட்டதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

தமிழகத்தின் புதுக்கோட்டை மாவட்டம் கோட்டைப் பட்டினத்திலிருந்து கடற்தொழிலுக்கு சென்ற மீனவர்கள் மூவர், இலங்கை காரைநகர் - கோவளம் கடற்பகுதியில் சட்ட விரோதமாக மீன்பிடியில் ஈடுபட்டுள்ளனர்.

இதனை அப்பகுதியில் கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டிருந்த இலங்கை கடற்படையினர் அவதானித்துள்ளனர்.

அதன்பின்னர், இலங்கை கடற்பகுதிக்குள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட அவர்கள் மூவரையும் சுற்றிவளைக்க முயன்ற போது கடற்படையினரின் கண்காணிப்புப் படகு மோதியதில் மீனவர்களின் விசைப் படகு கடலில் மூழ்கியுள்ளது.

இதனால் படகில் இருந்த மூன்று மீனவர்களும் கடலில் மூழ்கியுள்ளனர். பின்னர் அவர்களில் இருவர் கடற்படையினரால் மீட்கப்பட்டதுடன், மற்றைய மீனவர் காணாமல் போயிருந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். (ம-3,18,33,104)

## நைட்ரஜன் உரம்...

போதிலும் அதன் தரம் தொடர்பான சிக்கல் ஏற்பட்டமையால் இறக்குமதி இடைநிறுத்தப்பட்டது.

எனவே இந்தியாவிலிருந்து நைட்ரஜன் உடைய நனோ தொழிநுட்பத்தின் ஊடாக தயாரிக்கப்பட்ட உரத்தினை வெகு விரைவில் இறக்குமதி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று அமைச்சரவை இணை பேச்சாளர் அமைச்சர் ரமேஷ் பத்திரண தெரிவித்தார்.

வாராந்த அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்றபோது இதனைத் தெரிவித்தார். (ம-3)

## 17 வயது...

இது தொடர்பாக மேலும் தெரியவருகையில், முகநூலில் போலியான கணக்கு ஒன்றினை திறந்து அந்த முகநூல் மூலம் 17 வயது மாணவனுடன் உரையாடி பணம், நகை என்பவற்றினை தருமாறும் அப்படி தராவிட்டால் மாணவனது பெற்றோரை வெட்டப்போவதாகக் கூறி மாணவனின் நண்பர் ஒருவர் அச்சுறுத்தியுள்ளார்.

இதற்கு பயந்த மாணவன் குறித்த சந்தேகநபர் கேட்ட பணத்தையும் நகையையும் அவர் சொன்ன இடத்திற்கு கொண்டுசென்று வைத்தார். மாணவன் அவற்றினை வைத்துவிட்டு சென்றபின்னர் சந்தேகநபர் அவ்விடத்திற்கு வந்து அவற்றினை எடுத்துச் சென்றார்.

இது இவ்வாறு தொடர்ந்து சிலநாட்கள் நடைபெற்றுக் கொண்டிருந்தது. இந்த நிலையில் நகைகளையும் பணத்தினையும் தேடிய பெற்றோர் அவற்றினை காணாது மகனிடம் வினவினர்.

ஒரு கட்டத்திற்குமேல் உண்மையை மறைக்க முடியாத மாணவன் பெற்றோரிடம் உண்மையை போட்டுடைத்தார்.

இதனையடுத்து பெற்றோர் வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றினை பதிவு செய்துள்ளனர்.

முறைப்பாட்டின் அடிப்படையில் விசாரணைகளை மேற்கொண்ட வட்டுக்கோட்டை பொலிஸார் சந்தேகநபரை நேற்று கைது செய்துள்ளனர்.

அதனைத் தொடர்ந்து அவரிடம் மேற்கொண்ட விசாரணையின் அடிப்படையில் 3 மோதிரங்கள், 3 சங்கிலிகள், 3 வளையல்கள், ஒரு சோடி தோடு மற்றும் 2 இலட்சத்து பத்தாயிரம் ரூபாய் என்பவற்றினை வாங்கியதை ஒப்புக் கொண்டார்.

சந்தேகநபர் குறித்த நகைகளை நிதி நிறுவனத்தில் அடகு வைத்துள்ள நிலையில், அடகு வைத்ததற்காக வழங்கப்பட்டுள்ள ஆவணங்களை சந்தேகநபரிடமிருந்து பொலிஸார் மீட்டுள்ளனர். (ம-3,104)

## வடக்...

வடக்கு மாகாணத்தின் 5 மாவட்ட செயலகங்களிலும் தலா 2 ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர்களை நியமிப்பதற்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா நடவடிக்கை எடுத்துள்ளார்.

இதற்காக 5 மாவட்ட செயலகங்களில் இருந்தும் தலா இரண்டு உத்தியோகத்தர்களின் பெயர் விபரங்கள் ஆளுநரின் செயலகத்துக்கு முன்வைக்கப்பட்டுள்ளது.

மாகாணத்தில் ஒவ்வொரு மாவட்டத்திலும் காணப்படும் துறைசார் பிரச்சினைகளை ஆராய்ந்து அறிக்கையிடுவதற்காக மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் இருவரை மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா நியமிக்கவுள்ளார் என அறியமுடிகிறது.

அதன் ஊடாக உத்தியோகத்தர்கள் தமது மாவட்டத்தில் உள்ள பிரச்சினைகளை உடனடியாகவே அறிக்கையிட முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-3,18,33)

## அதிபர், ஆசிரியர்...

ஆம் திகதியன்று யாராவது வந்தால், அவர்கள் பாடசாலைக்குள் நுழைய அனுமதிக்கப்பட மாட்டார்கள் என அவர் தெரிவித்தார்.

சம்பள முரண்பாடுகளுக்கு தீர்வு கோரி, இணைய கற்பித்தல் நடவடிக்கைகளில் இருந்து விலகி ஆசிரியர், அதிபர்கள் சங்கம் முன்னெடுத்துள்ள வேலைநிறுத்தத்தின் 100ஆவது நாளான நேற்று ஆசிரியர், அதிபர் சம்பள முரண்பாட்டுக்கு எதிரான தேசியக் கூட்டமைப்பு கல்விச் செயலாளர் பேராசிரியர் கபில பெரேராவை நேற்று முன்தினம் சந்தித்துக் கடிதம் ஒன்றை கையளித்து இருந்தனர். (ம-3)

## இந்த ஒரு மாத...

பொது மக்களின் செயற்பாடுகள் குறித்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தபோதே இராணுவ தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா இவ்வாறு கூறினார்.

தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர், மக்கள் இந்த நேரத்தில் முடிந்தவரை பொது இடங்களில் கூடுவதைத் தவிர்க்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

கொரோனா மேலும் பரவாமல் தடுக்க இந்த ஒரு மாத காலம் முக்கிய மானது.

மக்கள் இதற்கு ஆதரவளித்தால், அடுத்த மாதத்தில் கொரோனா நிலைமையை எங்களால் இதைவிட குறைக்க முடியும். ஆனால் மக்களின் நடத்தையில்தான் கோவிட்டை அதிகரிப்பதா? அல்லது குறைப்பதா? என்பது தங்கியிருப்பதாக இராணுவத் தளபதி தெரிவித்தார். (ம-3)

### மெகா பவர்

திகதி 19/10/2021
சீட்டிழுப்பு இலக்கம் 0908
வெற்றி எழுத்து E | சுப்பர் இலக்க 17 | வெற்றி இலக்கங்கள் 27 29 33 69

### சுபிரி வாசனா

சீட்டிழுப்பு திகதி 2021/10/19 | சீட்டிழுப்பு இலக்கம் 1622
சுப்பர் இலக்கம் 15 | வெற்றி இலக்கங்கள் 30 33 49 55

### மஹஜன சம்பத

திகதி 2021/10/19
சீட்டிழுப்பு இலக்கம் 4560
ஆங்கில எழுத்து T | வெல்லப்பட்ட இலக்கங்கள் 7 0 4 1 5 4

தேசிய லொத்தர் சபை

### கொவிசெத — உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு திகதி 19.10.2021
சீட்டிழுப்பு இலக்கம் 2855
ஆங்கில எழுத்து J | வெற்றி இலக்கங்கள் 35 44 49 63

தேசிய லொத்தர் சபை

### தன நிதானய

திகதி -2021.10.19
சீட்டிழுப்பு இலக்கம் - 590
ஆங்கில எழுத்து R | வெற்றி இலக்கங்கள் 23 26 75 81

தொலைபேசி : 011 460 7000 / 011 232 4324
உத்தியோகபூர்வ முடிவுகளுக்கு : 011 466 5416

### சனிதா (Shanida)

திங்கட்கிழமை
சீட்டிழுப்பு திகதி : 2021.10.18
சீட்டிழுப்பு இல: 3697
வர்ணம்: நீலம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ.4,439,100/-
வெற்றி இலக்கங்கள் 03 12 33 68 | ஆங்கில எழுத்து U
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

### அத கோடிபதி (ADA KOTIPATHI)

திங்கட்கிழமை
சீட்டிழுப்பு இல: 1362
வர்ணம்: சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 2021.10.18
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 3,639,480/-
வெற்றி இலக்கங்கள் 19 34 54 70 | ஆங்கில எழுத்து Y
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

### SUPER BALL

Draw Numnber சீட்டிழுப்பு வாரம் 1536
Colour நிறம் ஊதா
Full Draw Date சீட்டிழுப்பு திகதி 2021 / 10 / 18
Week Days Name தினம் திங்கள்
வெற்றி எழுத்தும் இலக்கங்களும் G 01 06 23 67
Total Value of Prizes வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூபா 2,839,040/-

### ராசி

Draw Date திகதி 2021 / 10 / 18
Draw Number வெற்றி வாரம் 3248
Colour வர்ணம் மஞ்சள்
வெற்றி இலக்கங்கள் 05 20 36 62 | மீனம்
Total Value of Prizes வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 7,717,820/-

### ஜயோதா (Jayoda)

சீட்டிழுப்பு வாரம் (Draw Number) 1777
சீட்டிழுப்பு திகதி (Draw Date) 2021 / 10 / 18
வெற்றி இலக்கங்கள் 22 29 64 70 | ஆங்கில எழுத்து C
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி (Next Jackpot) ரூ. 27,088,140/-
6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்
தொ. பே. : 0112 333 546/47
Web: www.dlb.lk

# ஆசிரியர்கள், அதிபர்களின் போராட்டத்துக்கு எதிராக பெற்றோர்கள் ஆர்ப்பாட்டம்



(கொழும்பு)

ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களின் போராட்டத்துக்கு எதிராக பெற்றோர்கள் சிலரால் கவனயீர்ப்பு போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

குறித்த போராட்டமானது நேற்று செவ்வாய்க்கிழமை காலை பத்தரமுல்ல தியத்த உயன வளாகத்தில் மேற்கொள்ளப்பட்டது.

சம்பள அதிகரிப்பு உள்ளிட்ட பல கோரிக்கைகளை முன்வைத்து அதிபர்கள், ஆசிரியர்கள் தொழிற்சங்கத்தினர் ஒன்றிணைந்து வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இந்நிலையில் அவர்களுக்கு எதிராக பெற்றோர்கள் சிலர் இவ்வாறு முதல் தடவையாக கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-03)

# அமைச்சர் நாமல் குழுவினர் இன்று இந்தியா பயணம்

(கொழும்பு)

இந்திய பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் இன்று இந்தியாவின் - குஷிநகர் சர்வதேச விமான நிலையத்திலிருந்து கொழும்பிற்கான நேரடி விமான சேவையின் அங்குரார்ப்பண நிகழ்வில் கலந்து கொள்வதற்காக அமைச்சர்கள் , பௌத்த பிக்குகள் அடங்கிய குழு இந்தியாவிற்கு விஜயம் மேற் கொண்டுள்ளது.

கடந்த ஆண்டு செப்ரெம்பர் மாதத்தில் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ மற்றும் இந்திய பிரதமர் நரேந்திர மோடி ஆகியோருக்கிடையிலான மெய்நிகர் மாநாட்டில் இவ்விடயம் தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டிருந்தது.

அதற்கமைய அமைச்சர் நாமல் ராஜபக்ஷ, இராஜாங்க அமைச்சர்கள் நால்வர், பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் 100 பௌத்த மத குருமார்கள் இந்த விஜயத்தில் கலந்துகொள்ளவுள்ளனர். (ம-03)

# மரபுரிமைச் சின்னமான கீரிமலை சிறாப்பர் மடம் இன்று திறப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தின் முக்கிய மரபுரிமைச் சின்னங்களில் ஒன்றான கீரிமலை நகுலேஸ்வர சுவாமிகள் தண்ணீர்ப்பந்தல் (சிறாப்பர் மடம்) சீரமைக்கப்பட்டு திறந்து வைக்கப்படவுள்ளது.

தொல்லியல் திணைக்களத்தினால் சுப்பிரமணியர் கதிரவேலு (சிறாப்பர்) குடும்பத்தின் நேரடி வாரிசுகளும் இணைந்து இந்த தண்ணீர்ப்பந்தல் சீரமைப்புச் செய்யப்பட்டது. அதன் பழமை வாய்ந்த பிள்ளையார் சிலை இன்று புதன் கிழமை முற்பகல் 9.30 மணிக்கு ஆகம முறைப்படி வைக்கப்படவுள்ளது. (ம-03,18)


**வேலை வாய்ப்பு**

தனியார் அலுவலகம் ஒன்றில் பணி புரிவதற்கு பெண் ஊழியர் தேவை.
( உரும்பிராய் ) (8328)

**077 572 9724**
**075 572 9715**

**காணி விற்பனைக்கு உண்டு**

இருபாலை சந்திக்கு அண்மையில் (பருத்தித்துறை வீதியில் ) 4 1/2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. (8326)

**075 203 4547**

**விற்பனை உதவியாளர் வேலை வெற்றிடம்**

Petform (Pvt) Ltd இன் உரும்பிராய் கிளையில் பணி புரிவதற்கு உயர்தரம் வணிகக்கல்வி படித்த மோட்டார் வாகன அனுமதிப்பத்திரமுள்ள 20 - 25 வயதுள்ள ஆண் விற்பனை உதவியாளர் தேவை. (8316)

தொடர்புகளுக்கு:- 076 072 1245, 021 314 9700

**கட்டடம் வாடகைக்கு**

இல. 163, 1ஆம் குறுக்குத் தெரு யாழ்ப்பாணம் D.C.M கல்வி நிறுவனத்திற்கு அருகாமையில் 25×12=300 சதுர அடி கட்டடம் சகல வசதிகளுடன் வாடகைக்கு உண்டு. (8320)

**076 858 4216**

**மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு**

- Navi (Honda)
- Passion Plus (Hero Honda)

ஆகியன விற்பனைக்குண்டு. (8325)

**077 548 8044**






**அறை வாடகைக்கு**

கந்தர்மடத்திற்கு அருகாமையில் உள்ள வீடொன்றில் அறை வாடகைக்கு உண்டு
( கல்வி கற்கும் / பணிபுரியும் பெண்கள் விரும்பத்தக்கது. ) (8322)

**077 546 7643**

**வேலையாட்கள் தேவை**

- கோண்டாவில் கிழக்கில் சிறிய குடும்பத்திற்கு வீட்டுப் பணிப்பெண் தேவை (அண்மையில் வசிப்பவர் விரும்பத்தக்கது. )
- யாழ். ஸ்ரான்லி வீதியில் அமைந்துள்ள வர்த்தக நிறுவனம் ஒன்றிற்கு கணனி அறிவுடைய ஆண் வேலையாள் தேவை.
- விற்பனையாளர் - ஆட்டோ ( Light Vehicle ) சாரதி அனுமதிப் பத்திரம் உடையவர்கள் விரும்பத்தக்கது. (8324)

**076 135 9298**
**021 222 2049**

**கனடாவில்**

**உடனடி வேலைவாய்ப்பு**

- Breakfast Attendant
- Office Admin
- Front Desk Agent
- Night Auditor
- Room Attendant
- Pool Attendant
- Housekeeping Supervisor
- Maintenance Worker
- Front Desk/Food Service Attendant
- Guest Service Manager

(C-2832)

தகுதிகள்:- A/L PASS / DIPLOMA/DEGREE
ஆங்கில அறிவு
Hotel Management சம்மந்தமான அனுபவம் /கல்விக்கு முன்னுரிமை வழங்கப்படும்

COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A,சப்பல் லேன், யாழ்ப்பாணம்.

**0777-068-777**

**உடனடி வேலை வாய்ப்பு**

. நிர்வாக உத்தியோகத்தர்

விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள் (C-2836)

**V2 TRAVELS**

எமது கிளைகள்: கிளிநொச்சி, சுன்னாகம், சாவகச்சேரி, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, திருகோணமலை, வல்வெட்டித்துறை, கோப்பாய், புத்தூர்

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 15'000/-
பயிற்சியின்போது - 10'000/-

16/1, மாநகரசபைக்கட்டடம் கஸ்தூரியார் வீதி,. யாழ்ப்பாணம்.
0777-068-777
v2vacancies@gmail.com

**விரைவு பொதிகள் சேவை**

**V2 TRAVELS**

**UK-975 /=Kg**

எமது நேரடிக்கிளைகள்

- யாழ்ப்பாணம்
- புத்தூர்
- கோப்பாய்
- நெல்லியடி
- கொடிகாமம்
- மானிப்பாய்
- புதுக்குடியிருப்பு
- சுன்னாகம்
- கிளிநொச்சி
- பருத்தித்துறை
- வல்வெட்டித்துறை
- சாவகச்சேரி

(C-2831)

0768226240 DHL

**அமெரிக்கா செல்ல**

பாஸ்போர்ட் எடுத்து விட்டீர்களா?

விளையாட்டு அல்ல இது உண்மை

அமெரிக்க அதிஸ்ட விசா

இதுவரை எமக்கூடாக விண்ணப்பித்த நூற்றுக்கணக்கானோர் அமெரிக்கா சென்றுள்ளார்கள் (C-2833)

**இலவச வாய்ப்பை** தவறவிடுவானேன்?

எல்லோருக்கும் வெளிநாடு செல்ல வசதி இருக்காது ஆனால் 18 வயதிற்கு மேற்பட்ட யாரும் இந்த இலவச வாய்ப்பை பயன்படுத்தலாம்.

குடும்பத்தினர்களுக்கு இரண்டு வாய்ப்புக்கள்

பாஸ்போட் இல்லாமல் விண்ணப்பிக்க முடியாது

பதிவுகள் ஆரம்பம்-07-10-2021

உடனடியாக கொழும்பு சென்று One Day Pass Port எடுங்கள்

V2 Travels 0768226244
0768226237 / 0768226240


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 20.10.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.